Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | பங்குனி-29 | 11-04-2005 | திங்கட்கிழமை | ஓசை 52

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா.
T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987

(சி-11478)

## நோர்வே சமாதானத் தூதுவர் 18-ம் திகதி கொழும்பு வருகிறார்

### மறுநாள் கிளி.யில் புலிகளைச் சந்திப்பார்

(கொழும்பு)

**நோர்வேயின் விசேட சமாதானத்தூதுவர் எரிக் சூல் ஹெய்ம் எதிர் வரும் 18ஆம் திகதி கொழும்பு வரவுள்ளார். அவர் மறுநாள் கிளி நொச்சிக்கு விஜயம் செய்து தமிழீழ விடுதலைப்புலிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

ஆழிப்பேரலை நிவாரண நிதிப் பங்கீடு தொடர்பாக சிறிலங்கா அரசுக்கும், விடுதலைப்புலிகளுக் கும் இடையில் பொதுக்கட்டமைப்பு ஒன்று இதுவரை ஏற்படுத்தப்படாத நிலையில் முட்டுக்கட்டைகளைப் போக்கும் ஒரு முயற்சியாகவும் கிழக்குச் சம்பவங்கள் குறித்து கண் காணிப்புக்குழுவுடன் கலந்துரை யாடவுமே சூல்ஹெய்ம் இலங்கை வரவிருக்கிறார் என்று தெரிவிக்கப் படுகிறது. கொழும்பிற்கு வரும் இவர் அடுத்த நாள் மட்டக் களப்பிற்கு சென்று அப்பகுதி நிலைமைகளை பார்வையிடவுள் ளார். எதிர்வரும் 17 ஆம் திகதி தாயகம் திரும்பவுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்

(12ஆம் பக்கம் பார்க்க)

## தாயகம், தேசியம், தேசியத் தலைவரை பற்றோடு மதித்தவர் தில்லைக்கூத்தன்

### நாட்டுப்பற்றாளராகக் கௌரவம்



(கிளிநொச்சி)

தமிழீழ தாயகத்தையும் தமிழ்த் தேசியத்தையும் தமிழீழத் தேசியத் தலைவரையும் பற்றோடு மதித்து வாழ்ந்த ஒரு நாட்டுப்பற்றாளரை இழந்துவிட்டோம் என நாட்டுப்பற் றாளராகக் கௌரவிக்கப்பட்டுள்ள தில்லைக்கூத்தன் (இளையதம்பி நடராஜா) அவர்களின் மறைவு குறித்து தமிழீழ அரசியல்துறை யினர் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும், தமிழினம் விடுதலை பெறவேண்டும் என்ற

(12ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரில் காயமடைந்த துணைப்படை வீரரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல ராணுவம் தடை

(திருகோணமலை)

திருகோணமலை பூநகரில் விடுதலைப்புலிகளின் சோதனை நிலையம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்கு தலில் படுகாயமடைந்த தேசிய துணைப்படை வீரர் ஒருவரின் உடல் நிலை மோசமானதையடுத்து அவரை திருகோணமலை நகர மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் நடவடிக்கை சிறிலங்கா இராணுவத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. பூநகர் சோதனை நிலை யம் மீது வெள்ளிக்கிழமை சிறிலங்கா இராணுவப் புலனாய்வு அணி மற்றும் கருணாகுழு இணைந்து மேற்கொண்ட தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்ட தோடு, தமிழீழ தேசியத் துணைப் படை வீரர் ஒருவர் படுகாய மடைந்திருந்தார். திருகோணமலை சம்பூரில் நேற்று முன்தினம் இரவு அவரின் உடல்நிலை மோச மானதையடுத்து அவரை திருகோணமலை நகர மருத்துவமனைக்கு தரைவழியாக கொண்டு செல்வ தற்கு இராணுவத்தினரிடம் அனுமதி பெற்றுத்தருமாறு விடுதலைப்புலிகள் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர். போர் நிறுத்த கண்காணிப்புக்குழுவினர் அவ்வேண்டுகோளை இராணுவத்தினரிடம் அறிவித்தபோது, இராணுவத் தினர் தமது வழித்துணையுடனேயே அவரை கொண்டு செல்ல முடியும் என்றும் இரவு நேரத்தில் அது முடியாது என்றும் தெரிவித்துள்ளனர். இராணுவத்தினர் இழுபறி நிலையை ஏற்படுத்தி

(12ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தாக்கலாமாம் கடற்படை உசார் நிலையில்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக சிறிலங்கா கடற்படை யினர் தயார் நிலையில் வைக்கப் பட்டுள்ளதாக கொழும்புச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் 4ஆம் திகதி யிடப்பட்ட சிறிலங்கா உளவுத்துறை யின் அவசர எச்சரிக்கைக் குறிப் பில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள் ளது.

கூடுதல் அவதானிப்புடனும், அதிக முன்னெச்சரிக்கையுடனும் இருக்குமாறு அந்த உளவுத்துறை குறிப்பில் கூறப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளி யிட்டுள்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கைதான இராணுவச்சிப்பாய் நேற்று விடுவிக்கப்பட்டார்

(திருகோணமலை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் கைது செய் யப்பட்ட சிறிலங்கா இராணுவச் சிப்பாயான சிறிவர்த்தன நேற்று விடுவிக் கப்பட்டுள்ளார். திருகோணமலை மூதூர் சம்பூரில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறை செயலகத்தில் வைத்து பிற்பகல் 2.30 மணி யளவில இவர் இலங்கை போர்நிறுத்த கண்காணிப்புக்குழுவினரிடம் கையளிக்கப்பட்டார். நேற்று முன்தினம் 11 மணியளவில் திருகோணமலை மூதூர் கிழக்கு தங்கபுரப்பகுதியில் இவர் துப்பாக்கி, திசைகாட்டி ஆகியவற்றுடன் கைது செய்யப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் மாத இறுதியில் கைச்சாத்தாகுமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் ஏற்படுத்தப்படவுள்ள பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தம் இம்மாதம் இறுதியில் கைச்சாத்திடப்படுமென அரசின் சமாதான செயலகம் நம்பிக்கை தெரிவித்துள்ளது.

இது சம்பந்தமாக சகல நடவ டிக்கைகளும் பூர்த்தி செய்யப் பட்டுள்ளதாக சமாதான செயலகத் தின் பிரதம செயலாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக விடுதலைப்புலிகள் வெகுவிரைவில் நோர்வே ஏற்பாட் டாளர்களுக்கு அறிவிப்பார்கள் என சமாதான செயலகம் அறி வித்துள்ளது.

சனாதிபதி இதற்கான திகதி ஒன்றை அறிவிப்பார். அன்றைய தினத்தில் ஒப்பந்தம் கைச்சாத் திடப்படும் எனவும் சமாதான செய லக செயலாளர் ஜயந்த தனபால தெரிவித்துள்ளார்.

## இந்தோனேஷியாவில் மீண்டும் பூமி அதிர்ச்சி

(படாங்க்)

இந்தோனேஷியாவில் நேற்று பிற்பகல் மீண்டும் ஏற்பட்ட பூமி அதிர்ச்சியினால் இலங்கைத்தீவிற்கு எதுவித நேரடித்தாக்கங்களும் ஏற் படாது என்று சிறிலங்கா வானிலை அவதான நிலையம் அறிவித் துள்ளது. தாயக நேரப்படி பிற் பகல்4.29இற்கு இந்தோனேஷியா வில் ஏற்பட்ட இப்பூமி அதிர்ச்சி 6.8 ரிக்டர் அளவில் பதிவாகியிருக் கிறது. சுமாத்திரா தீவின் படாங்க் பகுதியில் இப்பூமி அதிர்ச்சி ஏற் பட்டது. இதனையடுத்து அப்பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி நகர்த்தப்பட்டனர். இது வரையில் எவ்வித சேதமும் ஏற்பட வில்லை என்று படாங்க் நிர்வாகம் அறி வித்துள்ளது.

## சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 14ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள்

### நேற்று சிறப்புற நடந்தேறின

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படை யணியின் 14ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகள் நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றன.

படையணித் தளபதிகளும், போராளிகளும் இணைந்து இந்நிறைவு விழா நிகழ்வினை சிறப்பாக ஒழுங்கமைத்திருந்தனர்.

மாலை 4.00 மணியளவில் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட மைதானத்தில் நடைபெற்ற நிகழ்வினை ஆரம்பிக்கும் முகமாக பொதுச் சுடரினை தளபதிகளில் ஒருவரான ஜெரி ஏற்றிவைக்க, வடபோர் முனைக் கட்டளைத் தளபதி கேணல தீபன் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைத்ததையடுத்து சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் கொடியினை படையணியின் சிறப்புத் தளபதி நகுலன் ஏற்றினார். தொடர்ந்து மாவீரர்களின் பொதுப் படத்திறகான சுடரினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி யின் தாக்குதல் தளபதிகளான பிரதாபன், வசந்தன், கோபித் ஆகியோர் ஏற்றிவைக்க, இதற்கான மலர்மாலை யினை படையணியின் தளபதிகளான லோரன்ஸ், வீரப்பன் ஆகியோர் அணிவித்தனர். தொடர்ந்து அன்னை பூபதியின் படத்திற்கு மாலதி படையணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான உசாவும், சோதியா படையணியின் தாக்குதல் தளபதிகளில் ஒருவரான வர்தாவும் சுடர் ஏற்றி, மலர் மாலை அணிவித்

(12ஆம் பக்கம் பார்க்க)

# சாள்ஸ் அன்ரனி சிறப்புப்படையணியின் 14 ஆம் ஆண்டு நிகழ்வு.....



பொதுச்சுடரேற்றும் தளபதி ஜெரி



தேசியக்கொடியேற்றும் கேணல் தீபன்



படையணிக்கொடியேற்றும்லெப்கேணல் நகுலன்



மாவீரர்களின்படத்திற்குமலர்மாலை அணிவிக்கும் போராளிகள்



கபடிஆட்டஅணிகளுக்கு கைலாகுகொடுக்கும் கேணல் தீபன்



அணிவகுத்து நிற்கும் படையணிப் போராளிகள்

## கச்சாய்க் கடலில் படையினரின் பயிற்சியால்
## தொழிலுக்குச் செல்ல கடற்றொழிலாளர் அச்சம்

(தென்மராட்சி)

கச்சாய் குடாக்கடலினுள் தொடர்ந்து படையினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் துப்பாக்கிச் சூட்டு பயிற்சி நடவடிக்கைகளால் கடற்றொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் தொழிலுக்குச் செல்ல அச்சம் கொண்டுள்ளனர். படையினரது சூட்டுப்பயிற்சி காரணமாக தமது உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என இப்பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கச்சாய்க் கடல் ஏரியை ஊடறுத்து கேரதீவு செல்வதற்கு குடாக் கடலிலுள்ள கல்மற்றும் மண்ணால் படையினரால் அமைக்கப்பட்ட பாதையினால் மீனவர்கள் ஏனைய கடல் பரப்பினுள் மீன்பிடிக்க செல்ல முடியாதநிலை ஏற்பட்டு இருப்பதாகவும் இப்பாதைகளை அகற்றி மீன்பிடித்தொழிலுக்கு ஏற்ற நிலையை உருவாக்க படைத்தரப்பு முன்வரவேண்டும் என்றும் இப்பகுதி மீனவர்கள் தெரிவிக்கின்றனர். (28)

## சேதமடைந்த வீதிகள் புனரமைக்கப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வடமராட்சியில் சுனாமி அனர்த்தம் காரணமாகச் சேதமடைந்த கடற்கரையோர வீதிகளைப் புனரமைத்துத் தருமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசம் கோரியுள்ளது.

சுனாமி அனர்த்தம் காரணமாக மேற்படி பகுதியிலுள்ள வீதிகள் பல சேதமடைந்துள்ளன.

இதனால் இப்பகுதி மக்களின் நலனைக் கவனத்தில் கொண்டு இவ் வீதிகளை புனரமைப்பு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும் எனச் சமாசம் மேலும் கோரியுள்ளது. (33)

## கைக்குண்டு மீட்பு!

(வடமராட்சி)

யாழ். வடமராட்சியிலுள்ள துன்னாலைப்பகுதியில் இருக்கும் கலிகைச் சந்திக்கு அண்மையில் இருக்கும் தனியார் காணி ஒன்றின் கிணற்றினுள் இருந்து வெடிக்காத கைக்குண்டு ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கிணற்றிலிருந்த இக்கைக்குண்டு குறித்து அக்கிணற்றைப்பயன்படுத்துபவர்களால் இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட தகவலையடுத்து இது மீட்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (33)

## புளியம்பொக்கனை புதிய பாலத்தில் வாகன விபத்து; போக்குவரத்துப் பாதிப்பு

(நமது நிருபர்)

பரந்தன்-முல்லைத்தீவு வீதியில் புளியம் பொக்கணைச் சந்திக்கருகில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள பாலத்தில் மோதி நேற்று வாகனம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

மாலை 4.00 மணியளவில் இடம்பெற்ற இச் சம்பவத்தை அடுத்து இப்பகுதிக்கான போக்குவரத்துக்கள் முற்றாகத் தடைப்பட்டிருந்தன.



பாலத்தின் நடுவில் குறுக்காகவாகனம் பாலத்துடன் மோதிக் கொண்டது. இதனை அடுத்து போக்குவரத்துக்கள் தடைப்பட்டன. இதனால் பாலத்துக்கு அருகாக வாகனங்கள் போக்கு வரத்தில் ஈடுபடமுற்பட்ட போதும் அப்பாதையால் பயணம் செய்த வாகனங்களும் நிலத்தில் புதைந்து பயணங்கள் தடைப்பட்டிருந்தன.


## பதவி வெற்றிடம்

கீழ்க்குறிப்பிடப்படும் பணிநிலைகளுக்கான வெற்றிடங்கள் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் கோரப்படுகின்றன.

- பாரவூர்தி ஓட்டுநர்
- உழவு இயந்திர ஓட்டுநர்
- பாதுகாப்பு உத்தியோகத்தர்

மேற்படி பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும் எதிர்வரும் 15-04-2005 இற்கு முன்னர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம், நடுவப்பணியகம், வட்டக்கச்சி எனும் முகவரிக்கு அனுப்பி வைப்பதுடன், நேரடியாகவும் தொடர்புகளை மேற்கொள்ளலாம்.

தகவல்:
த.பொ.மே. நிறுவனம்.
தமிழீழம்

(சி.11628)

## வரிவிளம்பரம்

### மணமகன் தேவை

யாழ்.இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த 1973 இல் பிறந்த 8 செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. தகுதி தராதரம் பெரிதாக எதிர்பார்க்கப் படமாட்டாது. ஏனைய யாவும் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். தொடாபுகளுக்கு:- 0112458073, 2227917 (5373)

### இறப்பர் முத்திரை

கிளிநொச்சியில் பொலிமர் றபர் ஸ்டாம் (இறப்பர் முத்திரை) உடனுக்குடன் செய்து கொள்ளவும் போட்டோக்கொப்பி, லெமனேட்டிங் போன்றவைகளை உடனுக்குடன் செய்து கொள்ளவும் பிள்ளையார் பொத்தகசாலை கண்டிவீதி, கிளிநொச்சி. T.P.021-2285750. (சி.11598)

### சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு

அன்பு வாணிபத்தில் சீமெந்துக்கல் விற்பனைக்குண்டு. அளவு-"6X4"X12" -கிடைக்குமிடம் அன்புவாணிபம், அந்தோனியார் கோவிலடி, அளம்பில். விலைஒருகல் 20/= (5908)

## புதுமனை புகுவிழா அழைப்பிதழ்

11.04.2005 திங்கட்கிழமை பி.ப12.06 தொடக்கம் 1.36 மணிவரையான சுபமுகூர்த்த வேளையில்.

1 ஆம் வட்டாரம் முருகன்கோவிலுக்கு அருகில் 1ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள திரு.இராமசாமி-பத்மநாதன் ஆகிய எனது புது மனைப்புகு விழா நிகழ்வு இடம்பெறவுள்ளதால் உற்றார், உறவினர்,போராளிகள் அனைவரையும் கலந்துசிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு.

(சி.11676)

# புதிய போப்பாண்டவரை தெரிவதில் தீவிரம்

# 117 கர்தினால்கள் முதல் கட்ட ஆலோசனை

(வத்திக்கான்)

**புதிய போப்பாண்டவரைத் தேர்ந்தெடுப்பது பற்றி 117 கர்தினால்கள் முதல் கட்ட ஆலோசனை நடத்தியுள்ளதாக வத்திக்கான் தகவல்கள் தெரிவிக்கின்றன.**



மரணம் அடைந்த போப்பாண்டவர் இரண்டாம் ஜோன் போல் உடல் நல்லடக்கம் கடந்த வெள்ளி வத்திக்கான் நகரில் நடந்தது. இதில் உலகத் தலைவர்கள், கர்தினால்கள் மற்றும் லட்சோபலட்சம் மக்கள் கலந்து கொண்டார்கள்.

போப்பாண்டவர் ஜோன் போல் மரணம் அடைந்ததைத் தொடர்ந்து புதிய போப்பாண்டவர் தெரிவு செய்யப்படவிருக்கிறார். வழக்கமாக போப்பின் இறுதிச் சடங்கு நிறைவடைந்த பிறகு ஒன்பது நாட்கள் துக்கம் கடைப்பிடிக்கப்படும். இதனால் வரும் 16ஆம் திகதி வரை வத்திக்கான் நகரில் கர்தினால்களும், மதகுருக்களும் தங்கி துக்கம் கடைப்பிடிப்பார்கள்.

அதன் பின்னர் 18ஆம் திகதி புதிய போப்பாண்டவர் தேர்வு செய்யும் பணி தொடங்குகின்றது.

117 கர்தினால்கள் வத்திக்கானில் தங்கி இருக்கிறார்கள். நேற்று முன்தினம் அவர்கள் ஒன்று கூடி முதல் கட்ட ஆலோசனை நடத்தினார்கள். புதிய போப் தேர்தல் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்து விவாதித்தார்கள். மீண்டும் வரும் 18ஆம் திகதி 117 கர்தினால்களும் கூடுகிறார்கள். அப்போது ஒரு மனதாக போப்பாண்டவர் தேர்வு செய்யப்படலாம். அல்லது 80 கர்தினல்களுக்கு மேல் ஆதரவு பெறுபவர் போப் ஆக அறிவிக்கப்படுவார். கருத்து ஒற்றுமை ஏற்பட்டால் ஒரே நாளில் தேர்தல் முடிந்து விடும். இல்லாவிட்டால் மேலும் சில நாள் நீடிக்கும்.

இத்தாலி மற்றும் லத்தீன் அமெரிக்காவைச் சேர்ந்த கர்தினால்களில் பலர் போப்பாண்டவராகும் வாய்ப்பில் முன்னணியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.



அமெரிக்காவின் தாக்குதலில் சதாம் ஹுசன் ஆட்சி கவிழ்ந்து இரண்டு ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் ஈராக் தலைநகர் பாக்தாத் பிர்தோஸ் சதுக்கத்தில் நடந்த ஆர்ப்பாட்டம். ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேற வேண்டும். சதாம் மீதான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்த வேண்டும். என்பது இவர்களின் கோரிக்கையாகும். நேற்று முன்தினம் நடந்த இவ் ஆர்ப்பாட்டத்தை ஷியா முஸ்லிம்கள் ஏற்பாடு செய்திருந்தனர்.

## ஏமன் இங்கிலாந்து தூதரகம் திடீரென மூடப்பட்டது

(லண்டன்)

ஏமன் நாட்டிலுள்ள இங்கிலாந்து தூதரகம் மூடப்பட்டுள்ளது. பாதுகாப்புக் கருதி தூதரகத்தை மூடியதாக இங்கிலாந்து அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தூதரக அதிகாரி ஒருவர் கூறுகையில் "ஊழியர்கள் பாதுகாப்புக் கருதி தூதரகம் மூடப்பட்டுள்ளது. நிலைமைகளை கண்காணித்து வருகிறோம். அதன் பிறகு தூதரகத்தைத் திறப்பது பற்றி முடிவு செய்யப்படும் என்றார்.

## அடுத்த போப்பாண்டவர் யார்? கர்தினால்கள் கருத்துக் கூறத் தடை

(வத்திக்கான்)

அடுத்த போப்பாண்டவர் யார் என்பதை கர்தினால்கள் யாரும் தனிப்பட்ட முறையில் பத்திரிகைகள் மற்றும் செய்தி நிறுவனங்களுக்கு பேட்டி அளிக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வத்திக்கான் செய்தித் தொடர்பாளர் ஜோகுவின் நாவ்ரோவால்ஸ் கூறும் போது "புதிய போப்பாண்டவர் தேர்தலுக்கு முன்பு யாரும் பேட்டி அளிக்கக்கூடாது என்று கர்தினால்கள் அனைவரும் ஒட்டு மொத்தமாகக் கூடி முடிவு செய்திருக்கிறார்கள்.

அது வரையும் அமைதியான முறையில் அவர்கள் பிரார்த்தனையில் ஈடுபடுவார்கள். அவர்கள் மறைவாக இருந்து தவ முயற்சியில் ஈடுபடுவார்கள். இதில் பத்திரிகைகள் தலையிட அனுமதிக்க முடியாது. இது ஒரு மரியாதைக்குரிய விஷயம் ஆகும் என்றார்.

புதிய போப்பாண்டவரை தேர்வு செய்ய கூடியிருக்கும் கர்தினால்கள் அனைவரும் தினமும் நேரடியாகச் சந்திக்க வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. மதிய உணவு அல்லது தேநீர் அருந்தும் போது அனைவரும் சந்தித்து தகவல்களைப் பரிமாறிக் கொள்ளும் வகையில் இந்தச் சந்திப்பு நடைபெறும். இதற்கிடையே போப்பாண்டவர் மறைந்த போது அடைக்கப்பட்ட புனித பீற்றர் ஆலயம் மீண்டும் திறக்கப்பட்டது. சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளது. ஆனால் போப்பாண்டவர் அடக்கம் செய்யப்பட்ட இடம் மட்டும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும்.

## சார்ள்ஸ்- கமீலா திருமண வைபவத்தில் நகைச்சுவைத் தீவிரவாதியால் பரபரப்பு

(லண்டன்)

பிரிட்டனில் நகைச்சுவை தீவிரவாதி ஒருவர் சார்ள்ஸ்- கமீலா திருமணம் நடக்கும் இடத்தில் வெடிகுண்டு வைத்திருப்பதாக மிரட்டல் விடுத்ததையடுத்து அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த 2003 ஆம் ஆண்டு இளவரசர் சார்ள்சின் மகன் இளவரசர் வில்லியமின் 21 ஆவது பிறந்த நாள் விழா நடந்தது. அப்போது சர்வதேச பயங்கரவாதி ஓசாமா பின்லேடன் போல் தாடி வைத்துக் கொண்டு பாதுகாப்புப் படையினரை ஊடுருவி அரண்மனைக்குள் புகுந்து இளவரசர் வில்லியமுக்கு முத்தம் கொடுக்க முயன்றார் ஒருவர். அவரைப் பொலிசார் கைது செய்தனர். அவர் பெயர் ஆரோன் பர்ஷாக்.

அதே நபர் தற்போது இளவரசர் சார்ள்ஸ்- கமீலா திருமணம் நடைபெற்ற இடத்திற்குள் புகுந்து பாதுகாப்புப் படையினருக்கு பீதியை உண்டாக்க முயன்றார். பாதுகாப்புப் படையினர் அவரைப் பிடிக்க முயன்றனர். அப்போது அவர், தான் வைத்திருக்கும் பையில் வெடிகுண்டு இருப்பதாகக் கூறி மிரட்டியுள்ளார். பாதுகாப்புப் படையினர் பையை பிடுங்கி சோதித்துப் பார்த்ததில் அதில் வெடிகுண்டு ஒன்றும் இல்லை என்று தெரிய வந்தது. அதன் பின்னர் பொலிசார் அவரைக் கைது செய்தனர். இவர் அடிக்கடி இப்படிச் செய்வதால் இவரை நகைச்சுவை தீவிரவாதயென பொலிசார் அழைக்கின்றனர்.



அமெரிக்காவில் பயங்கரவாதிகள் பணக் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் நோக்கில் அந்நாட்டு பங்குகளை வெளிநாட்டு வங்கிகளுக்கு விற்பனை செய்யும் நிலையில் நியூயோர்க் பங்குச் சந்தைக் கட்டடம் ஒன்றில் காவலிலுள்ள அமெரிக்கப் பொலிஸ் வீரர்.

## ஜப்பான் பொருட்களை புறக்கணித்து சீன மாணவர்கள் போராட்டம்

ஜப்பான் பொருட்களைப் புறக்கணிக்கும் போராட்டம் சீனாவில் வலுத்து வருகிறது. தலைநகர் பீஜிங் மற்றும் புறநகர்ப் பகுதியில் எலெக்ட்ரோனிக் பொருட்கள் விற்கும் ஏராளமான கடைகள் இருக்கின்றன. இந்தப் பகுதிக்கு நேற்று முன்தினம் ஆயிரக்கணக்கான மாணவர்கள் திரண்டு சென்று போராட்டம் நடத்தியுள்ளனர். "ஜப்பானிய பொருட்களை வாங்காதீர்கள்" என்று கோஷம் போட்டனர். வணிக வளாகத்துக்குள் நுழைய முயன்ற ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிசார் தடுத்து நிறுத்தினார்கள்.

இதே போன்ற போராட்டம் சீனாவில் பல இடங்களில் நடந்து வருகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு செவ்டு என்ற இடத்தில் ஜப்பான் வர்த்தக நிலையம் ஒன்று சூறையாடப்பட்டது. இந்தப் போராட்டங்களின் எதிரொலியாக பீஜிங்கிலுள்ள ஜப்பான் தூதரகத்துக்கும், தூதரக அதிகாரிகள் வீடுகளுக்கும் பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.



தங்கள் பெற்றோரின் திருமணத்தைக் காண வந்த பிரிட்டன் இளவரசர் சார்ள்ஸ் மகன்கள் (வலமிருந்து) வில்லியம்ஸ், ஹென்றி, கமீலாவின் மகன் டாம் பார்க்கர் மகள் லாரா பார்க்கர்.

## இஸ்ரேல்-ஈரான் சனாதிபதிகள் கைகுலுக்கினர் செய்தியை மறுக்கிறார் சனாதிபதி கட்டாமி

இஸ்ரேல் சனாதிபதியுடன் கை குலுக்கியதாக வந்த செய்திகளை ஈரான் சனாதிபதி முகமது கட்டாமி மறுத்துள்ளார்.

மறைந்த போப் இரண்டாம் ஜோன்போலின் இறுதிச் சடங்கு மற்றும் உடல் நல்லடக்கம் கடந்த வெள்ளியன்று வத்திக்கான் நகரில் நடந்தது. இறுதிச் சடங்கு நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான உலகத் தலைவர்கள் கலந்து கொண்டனர். ஈரான், இஸ்ரேல் நாடுகளின் தலைவர்களும் பங்கேற்றனர். ஈரானில் பிறந்த இஸ்ரேலிய சனாதிபதி மோஷி கட்சேவ் இறுதிச் சடங்கு நிகழ்ச்சியின் போது சிரியா, ஈரான் நாட்டு தலைவர்களுடன் கைகுலுக்கியதாகக் கூறினார். இதை ஈரான் சனாதிபதி கட்டாமி மறுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்; "இஸ்ரேல் அதிபரைச் சந்தித்து கை குலுக்கவோ, பேசவோ இல்லை" என்றார்.



## ஹெய்ட்டி அதிபர் நாட்டை விட்டு ஓட காரணமான தீவிரவாத தலைவன் பலி

ஹெய்ட்டி அதிபரை விரட்டிய தீவிரவாதத் தலைவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாக ஹெய்ட்டி அரசாங்கம் அறிவித்துள்ளது. ஹெய்ட்டியில் அதிபராக இருந்தவர் ஜியான் பொட்ராண்டு அரிஸ்டி இவரை எதிர்த்து முன்னாள் இராணுவ வீரர் ரெமி சாந்தி ராவிக்ஸ் தலைமையில் ஒரு தீவிரவாதக் கும்பல் உருவானது. கடந்த 2005ஆம் ஆண்டு பல்வேறு பொலிஸ் நிலையங்களுக்குள் புகுந்த இவர்கள் அதிரடித் தாக்குதல் நடத்தினர். இதையடுத்து ஹெய்ட்டி அதிபர் நாட்டை விட்டுத் தப்பியோடினார். இந்நிலையில் ஐ.நா அமைப்பினர் கலவரத்தைக் கட்டுப்படுத்த ஹெய்ட்டி சென்றனர். இதற்கிடையில் தீவிரவாதிகளுக்கு எதிராக தாக்குதல் நடத்திய அந்நாட்டு இராணுவத்தினர் தீவிரவாதத் தலைவனை சுட்டுக் கொன்றுள்ளதாக அறிவித்துள்ளனர்.

# கிளி.பேரணியில் எழுச்சியை வெளிப்படுத்தி தலைவரின் கரங்களைப் பலப்படுத்துவோம்

## பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல்

**கிளிநொச்சியில் நாளை நடைபெறவுள்ள பேரணியில் எமது எழுச்சியை வெளிப்படுத்தி எமது தலைவரின் கரங்களைப்பலப்படுத்துவோம் என பரந்தன் தேசிய எழுச்சிப் பேரவை அறைகூவல் விடுத்துள்ளது.**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் , சிறிலங்கா அரசானது எமது விடுதலை அமைப்பையும், மக்களையும் பலவீனப்படுத்துகின்ற முயற்சிகளில் தொடர்ந்து தீவிரமாகச் செயற்படுமானால் நிச்சயமாக எமது தலைவர் மிக விரைவில் ஓர் தீர்க்கமான முடிவை எடுப்பார் என்பது உறுதி எமது மக்களின் எதிர்பார்ப்புக் களும் இன்றுள்ள அரசியல் நிலைமைகளும் களநிலைமைகளும் போகும் விதம் எமக்கு ஏமாற்றத்தையே தருகின்றது முக்கியமாக பேச்சுவார்த்தைகள் தேக்கமடைந்து நெருக்கடி நிலைக்கு உட்பட்டு மக்கள் முழு அளவில் ஏமாற்றமடைந்துள்ளனர். குறிப்பாக சுனாமியால் தாயகப் பிரதேசம் பேரழிவைச் சந்தித்து நிற்கின்ற இந்நிலையில் சர்வதேச சமூகம் எம் மக்களுக்கு செய்ய வேண்டிய மனிதாபிமான உதவிகள் எம் மக்களுக்கு சென்றடையவில்லை சுனாமிக்கு பின் சர்வதேச சமூகத்திடம் இருந்து பெருமளவு உதவிகளை சிறிலங்கா அரசு பெற்றுக் கொண்டு எமது தாயகப்பகுதிக்கு எவ்வித உதவிகளும் பகிர்ந்தளிக்கப்படாத நிலையில் சர்வதேச ரீதியில் அவர்கள் புலிகளுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வந்திருப்பதாகவும் தமிழ் மக்களுக்கும் தாங்கள் பகிர்வதற்கான ஏற்பாடுகளை செய்து கொண்டிருப்பதாகவும் ஒரு செய்தியை பரப்பிவருகிறார்கள் இதில் எதுவித உண்மையும் இல்லை.

அண்மைக்காலமாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் ஆயுதம் தரிக்காத விடுதலைப்புலிப் போராளிகள் மீதான தாக்குதல்கள் அதிகரிப்பது போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அச்சுறுத்தலாகவே உள்ளது. இது சமாதான முயற்சிகளைப் பாதிக்கும். இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் இயங்கும் சகல ஆயுதக்குழுக்களிடம் இருந்தும் ஆயுதங்களை யுத்த நிறுத்த உடன்படிக்கையின்படி அகற்றுவதன் மூலமே இந்தப் பகுதியில் இடம் பெறும் ஆட்கொலைகளை நிறுத்த முடியும்.

ஆழிப்பேரலைக்குப் பின்னர் பாதிக்கப்பட்ட இடங்களை புனரமைப்பதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணைந்து செயற்பட வேண்டும் என கோரப்பட்டுள்ளது. இதற்கமைய பொதுக்கட்டமைப்புத் தொடர்பில் நோர்வேயும் செயற்திட்டம் ஒன்றை வகுத்து ந கின்றது ஆகவே அரசு இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை வழங்குவதற்கு முன்வர வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

எமது போராளிகள் தொடர்ச்சியாக சீண்டப்படுவதையும் கொல்லப்படுவதையும் காயப்படுத்துவதையும் தாங்க முடியாது உள்ளது. இறுதியாக மாவீரர் தின உரையில் எமது தலைவரால் மிகத் தெளிவாக எமது நிலைப்பாடுகள் தெளிவுபடுத்தபட்டது. அதன்பின்னர் சுனாமி அனர்த்தம் எமது தாயகப்பகுதியில் ஏற்பட்ட போது நாங்கள் அதனை எதிர் கொள்ள வேண்டியவர்களாக இருந்தோம் அந்த நேரத்தில் எமது தலைவர் முன்னுரிமை கொடுத்து எமது மக்களுடைய மீட்புப்பணியை மனிதாபிமானப் பணியாக அவர்களுடைய மறு வாழ்வுக்கு பரிகாரம் தேட வேண்டியவர்களாகினோம் இவையெல்லாம் சர்வதேச சமூகத்திற்கு நன்கு தெரியும்.

அரசு உண்மையில் சமாதானச் சூழலையோ அமைதிச் சூழலையோ எமது மக்கள் ஒரு தீர்வைப் பெறுகின்ற நியாயபூர்வமான முயற்சியையோ விரும்பவில்லை. அவர்கள் சமாதானச் சூழலை சீர்குலைத்து புலிகளைச் சீண்டி ஒரு யுத்த நெருக்கடியை ஏற்படுத்தி சர்வதேச அளவில் புலிகள் மீதும் தமிழ் மக்களுடைய அபிலாசைகள் கோரிக்கைகள் உரிமைப்போராட்டம் என்பவற்றை களங்கப்படுத்தும் நோக்குடனும் பல காரியங்களைச் செய்து வருகிறார்கள் எமது தாயகத்தில் ஒரு பெரிய நெருக்கடியான சூழல் தான் தொடர்ந்து இருந்து வருகிறது. இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் எமது ஆதரவாளர்கள் போராளிகள் பொறுப்பாளர்கள் தொடர்ச்சியாக கொல்லப்படுகின்ற நிலைமை தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இதற்கு நாங்கள் வெகு விரைவில் முற்றுப்புள்ளி வைக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம் நிச்சயமாக எமது தலைவர் ஒரு தீர்க்கமான முடிவை எடுக்கின்ற காலம் நெருங்கி வருகின்றது இந்த நேரத்தில் நாம் ஒன்றுபட்ட எமது எழுச்சியைக் கொண்டு எமது தலைவனின் கரங்களைப் பலப்படுத்துவோம் என இப்பேரணியின் மூலம் உறுதி கொள்வோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களை புனரமைப்பதற்கான பயிற்சிப்பட்டறை

சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட கிராமங்களை மீளப் புனரமைப்பதற்கான பயிற்சிப்பட்டறை ஒன்றை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைத்துள்ளது.

கிளிநொச்சியிலுள்ள வெண்புறா செயற்கை உறுப்பு தொழில்நுட்ப நிறுவன பன்னோக்கு மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் இப் பயிற்சிப்பட்டறை ஆரம்பமாகியது. எதிர்வரும் 12ஆம நாள்வரை இடம்பெற



வுள்ள இப்பயிற்சிப் பட்டறையின் ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடர் ஏற்றப்பட்டதையடுத்து, தேசியக்கொடி, தமிழர் புனர்வாழ்வுக் கழகக் கொடி என்பன ஏற்றப்பட்டன.

சிறுவர் இல்லங்களின் புனரமைப்பிற்கும், அபிவிருத்திக்குமான பணிப்பாளர் ரவி அவர்கள் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் அன்னை பூபதி அவர்களையும் நினைவுகூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

தலைமையுரையினைத் தொடர்ந்து ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இப் பயிற்சி பட்டறையின் நோக்கம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும் தமிழர் புனர்வாழ்வுக் கழக திட்டமிடல் பணிப்பாளர் லோறன்ஸ் அவர்கள் தெளிவாக எடுத்துக்கூறினார். அதனைத் தொடர்ந்து பயிற்சிகள் ஆரம்பமாகின.

**புது.மக்கள் சந்தை, வணிக நிலையங்களில்**

# பாவனைக்குதவாத பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அழிப்பு

தமிழீழ நிதித்துறையின் விலைக்கட்டுப்பாட்டுப் பகுதியினரால் புதுக்குடியிருப்பு மக்கள் சந்தையில் வணிக நிலையங்கள் மீது திடீரென மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது பெருமளவான காலாவதியான மக்கள் பாவனைக்கு ஒவ்வாத பொருட்கள் கண்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் இத்திடீர் சோதனை இடம் பெற்றது. பிஸ்கட் வகைகள், மென் பானங்கள், மருந்துப் பொருட்கள் என்பனவயே கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டபொருட்கள் ஆகும். (08)

# முகாமைத்துவ போட்டியில் துணுக்காய் பி.சபை முதலாமிடம்

(மல்லாவி)

வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கான 2004 ஆண்டு முகாமைத்துவ போட்டியில் மாவட்ட மட்டத்தில் துணுக்காய் பிரதேச சபை முதலாவது இடத்தையும், மாந்தை கிழக்கு பிரதேச சபை இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டது.

இதற்கான கேடயமும் சான்றிதழ்களும் கடந்த 31 ஆம் திகதி வழங்கப்பட்டது. 2003 ஆம் ஆண்டு நடைபெற்ற போட்டியிலும் துணுக்காய் பிரதேச சபை முதலாம் இடத்தை பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத் தக்கது. (24)

# வவு.மகாறம்பைக்குளத்தில் அன்னை பூபதி நினைவு நிகழ்வு.

(வவுனியா செய்தியாளர்)

வவுனியா மகாறம்பைக்குளத்தில் அன்னை பூபதியின் நினைவு நிகழ்வு கடந்த சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு மகாறம்பைக்குளம் சன சமூக நிலைய மண்டபத்தில் இடம் பெற்றது.

மகாறம்பைக்குளம் மாதர் சங்கத் தலைவி திருமதி.தாமோதரம் சரஸவதி தலைமையில் நடைபெற்ற நினைவு நிகழ்வில் முதலில் அன்னை பூபதியின் திருவுருவப்படத்திற்கு சுடரேற்றி மலரஞ்சலி செலுத்தப்பட்டது அதனைத் தொடர்ந்து அக வணக்கம் செலுத்துப்பட்டது. தொடர்ந்து அன்னை பூபதி நினைவுரைகளை விடுதலைப்புலிகளின் வவுனியா நகரப் பொறுப்பாளர் தர்மேந்திரா, மகாறம்பைக்குளம் கிராமசேவை அலுவலர் ஜனாப் யூசுப்நஷார், மகாறம்பைக்குளம் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ஜனாப் ஏ.எம் பைசர் ஆகியோர் நிகழத்தினர்.

இறுதியாக மகாறம்பைக்குளத்தில் உள்ள மூத்த வயோதிபப் பெண்களான திருமதி. குப்புசாமி. காளியம்மா, திருமதி. முத்து மரியம்மா, திருமதி சிதம்பரப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை ஆகிய மூவருக்கும் அன்னை பூபதி நினைவாக நினைவுப் பொருட்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (10)

# பாப்பரசரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இரணைப்பாலையில் இரங்கல் திருப்பலி

புனித பாப்பரசர் இரண்டாம் அருளப்பர்சின்னப்பர் ஆன்மா இளைப்பாற்றிற்காக கடந்த வெள்ளிக்கிழமை அன்று முல்லைமாவட்ட கத்தோலிக்க மக்களால் இரணைப்பாலை பற்றிமா அன்னை ஆலயத்தில் இரங்கல் திருப்பலியும், அஞ்சலி நிகழ்வும் நடாத்தப்பெற்றது. முல்லை மாவட்ட கத்தோலிக்கக் குருக்கள்மார் ஒன்று சேர்ந்து இரங்கல் திருப்பலியினை கூட்டுத்திருப்பலியாக நிறைவேற்றினர்.

இரணைப்பாலை பங்குத் தந்தை வணபிதா ஆனந்தகுமார் அடிகளார் அவர்களின் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெற்றது. பெருமளவான மக்கள் கலந்து கொண்ட இந் நிகழ்வில் முல்லை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், முல்லை மாவட்ட அரசியல்துறை மகளிர் பொறுப்பாளர் வேழினி, முல்லை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் மூர்த்தி, முல்லை மாவட்ட அரசியல்துறை நிதிப் பொறுப்பாளர் புகழரசன், புதுக்குடியிருப்பு பிரதேசப் பொறுப்பாளர் பிறையாளன், புதுக்குடியிருப்பு காவல் பணிமனைப் பொறுப்பாளர் உட்பட பெருமளவானோர் கலந்து கொண்டனர் இதன் போது முல்லை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் அஞ்சலி உரை நிகழ்த்தினார். தொடர்ந்து முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதன் அடிகளார் சிறப்புரையாற்றினார். அதனையடுத்து பொது அமைப்புக்களின் ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட அனுதாபச் செய்தியினை அதிபர் அன்ரன் குலதாஸ் அவர்கள் வாசித்தார். (08)

# ஓய்வு பெற்றார்

இலங்கை வங்கியில் 30 ஆண்டுகள் பணிபுரிந்த வி.ஐயம் பெருமாள் அவர்கள் நேற்று ஓய்வு பெற்றார் ஊழியர்கள் வாடிக்கையாளர்கள் மணங்களில் நிரந்தர இடம் பிடித்துக் கொண்டுள்ள இவர் தமது சேவைக் காலத்தின் பெரும் பகுதியில் கிழக்கு மாகாணத்திலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் இறுதியாக வன்னியிலும் சேவையாற்றியுள்ளார்.

யுத்த சூழலில் 1991-2001 வரை யாழ். இரண்டாம் கிளையில் முகாமையாளராக பணியாற்றி யாழ். மக்கள் ஒட்டு மொத்த இடப் பெயர்வை சந்தித்தபோதும் மிருசுவிலில் வங்கியை தற்காலிகமாக இயங்கவைத்து வாடிக்கையாளருக்கு சேவை செய்தார்.

-இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின்-

# வவுனியா கிளைச் செயலக வாகனம் கொழும்பில் ஆயுததாரிகளால் கடத்தல்

(வவுனியாசெய்தியாளர்)

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வவுனியா கிளைச் செயலக வான் ஒன்று கொழும்பில் வைத்து ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இடம்பெயர்ந்தோர் செயற்றிட்டத்திற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தால் வழங்கப்பட்ட 40 இலட்சம் ரூபா பெறுமதியான WP-GO-7302 எனும் இலக்கமுடைய வானே கொழும்பு வெல்லம்பிட்டிய எனும் இடத்தில் வைத்து ஆயுததாரிகளால் கடத்திச் செல்லப்பட்டுள்ளது.

பொரளையில் உள்ள இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைமைப் பணிமனையில் இருந்து வெல்லம்பிட்டியவிற்கு சென்ற இவ்வாகனம் பின்தொடர்ந்து உந்துருளியில் வந்த இருவர் வெல்லம்பிட்டிய பகுதியில் சாரதி வானை நிறுத்திவிட்டு கீழே இறங்க முற்பட்ட போது சாரதியின் நெற்றியில் கைத்துப்பாக்கியை வைத்து அச்சுறுத்தி சாரதியை கீழே இறக்கி விட்டு வானைக் கடத்திச் சென்றுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் பொலிசில் முறையிட்டுள்ளனர். (10)

# கிளி.மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கு பிரதேச ரீதியாக பயிற்சி வகுப்புக்கள்

கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான நான்குநாள் பயிற்சிநெறி பிரதேச ரீதியாக நடைபெற்று வருகின்றது.

இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியமும், தமிழர் புனர்வாழ்வுக்கழகமும் இணைந்து நடாத்தும் இப்பயிற்சி நெறியானது வடக்கு கிழக்கு முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினரின் நெறிப்படுத்தலில் கிளிநொச்சி மாவட்ட முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைத்தின் அனுசரணையில் நடைபெற்று வருகின்றது.

இதன் முதற்கட்டமாக கடந்த மூன்றாம் நான்காம் ஐந்தாம் ஆறாம் திகதிகளில் கிளிநொச்சி நெற்றோ நிறுவனத்திலும் ஏழாம், எட்டாம், ஒன்பதாம், பத்தாம், திகதிகளில் பூநகரியில், பூநகரி அபிவிருத்தி நிலையத்திலும், அக்கராயனில் அக்கராயன் அபிவிருத்தி நிறுவனத்திலும் காலை 9.மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன.

இதன் அடுத்தகட்டமாக ஐம்பது ஆசிரியர்ககளுக்கு இம்மாதம் 22 ஆம் திகதி ஆரம்பமாகி 25 ஆம் திகதி வரை பயிற்சிகள் நடைபெறவுள்ளன. (ச)

# இராணுவ ஆக்கிரமிப்பால் இடம்பெயர்ந்தோருக்கும் சர்வதேச அமைப்புக்கள் உதவ வேண்டும்

— நலன்புரி நிலையங்களின் சமாசத் தலைவர் த. கணேஷ்

(யாழ்ப்பாணம்)

**சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்காகப் பல்வேறு அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வுத் திட்டங்களையும் அமுல்படுத்தி வரும் சர்வதேச அமைப்புக்கள், இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம்பெயர்ந்து வாழ்ந்து வரும் மக்களது அபிவிருத்திகள், புனர்வாழ்வுகள் என்பவற்றின் மீதும் அதிக அக்கறை செலுத்த வேண்டும் என யாழ்.மாவட்ட இடம்பெயர்ந்தோர் நலன்புரி நிலையங்களின் சமாசத்தலைவர் த.கணேஷ் கேட்டுள்ளார்.**

கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட சுனாமி ஆழிப்பேரனர்த் தங்களின்போது பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களது நலன். மீது அக்கறை கொண்டு பல்வேறு சர்வதேச அமைப்புகளும் அபிவிருத் தி/புனர்வாழ்வுத் திட்டங்களையும் அமுல்படுத்தி வருகின்றன. இது அனைவராலும் ஏற்றுக்கொள்ளத் தக்க காலத்திற்கு அவசியமான வேலைத்திட்டங்களே. இதனை நாம் ஏற்கின்றோம், வரவேற்கின்றோம்.

எனினும் சுனாமியால் பாதிக் கப்பட்ட மக்களின் நலன் குறித்து அக்கறை செலுத்திவரும் சர்வதேச அமைப்புகள் இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து கடந்த 15 வருடங்களுக்கு மேலாக அல்லலுற்றுவரும் மக்கள் மீதும் தமது அக்கறையைக் காட்டாமை இடம் பெயர்ந்த மக்கள் மத்தியில் பலத்த ஏமாற்றத்தையும், அவநம்பிக்கையையும் ஏற்படுத் தியுள்ளது.

எனவே சர்வதேச அமைப்புகள் சுனாமியால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த மக்களுக்கு வழங்குவது போன்ற உதவிகளை இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மக்களுக்கும் வழங்கவேண்டும் என அவர் மேலும் கோரியுள்ளார். (33)

# கலாச்சாரம் பேணும் குழுவினர் உடுவிலில் தீவிர நடவடிக்கை

(உடுவில்)

உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் இடம் பெற்றுவரும் களவுகள் கொள்ளைகள், பெண்களுடன் சேட்டை மற்றும் வீதிகளில் நின்று பிரச்சினைகளில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கையை இப்பிரதேசத்திற்கான கலாச்சாரத் தைப் பேணும் குழுவினர் எடுத்து வருகின்றனர்.

கடந்த காலத்தில் பல இனம் காணப்பட்டு உரிய நடவடிக் கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள னர். ஆனாலும் ஒரு சில மீண்டும் சில வேண்டத்தகாத செயல்களில் ஈடுபடுவதாக பொதுமக்கள் முறை யிட்டுள்ளனர்.

இவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வுள்ளதாகவும் எதிர்காலத்தில் இத்தகைய செயல்பாடுகளில் யாரையும் ஈடுபடவேண்டாம் எனவும், மீறிச் செயற்படுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற் கொள்ளப்படவுள்ளதாகவும் கலாச் சாரம் பேணும் குழுவினர் தெரிவித் துள்ளனர். (41)

# இடைநிறுத்தப்பட்ட நிவாரணத்தை மீண்டும் வழங்கக் கோரிக்கை

(கோப்பாய்)

கோப்பாய் பிரதேசசெயலகப் பிரிவில் உள்ள 31 கிராம அலுவலர் பிரிவு மக்களுக்கு கடந்த ஏழு மாதங் களாக இடைநிறுத்தப்பட்டுள்ள உலர் உணவு நிவாரணத்தை மீண்டும் வழங்க வேண்டுமென இப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நிவாரணம் இடைநிறுத்தப் பட்டுள்ளமையினால் இப்பிரதேச மக்கள் பாரிய நெருக்கடிகளை எதி ர்நோக்கி உள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்ட வர்களுக்கு தமது கோரிக் கைகளை இவர்கள் கையளித் துள்ளனர். (28)

# யாழ்.பேராலயத்தில் பாப்பரசருக்கான திருப்பலி

(யாழ்ப்பாணம்)

பாப்பரசருக்கான ஆத்ம சாந்தி வேண்டி விசேட திருப்பலிப் பூசையும், ஆராதனை நிகழ்வும் நேற்று முன் தினம் காலை யாழ். பேராலயத்தில் இடம் பெற்றது. எந்தவித மத வேறு பாடுமின்றி இந்நிகழ்வில் இந்து பௌத்த மதப்பெரியார்களும் விடு தலைப்புலிகளது அரசியல் துறைப் போராளிகளும், யாழ். மாவட்ட படைகளின் கட்டளை தலைமை யகத்தை சேர்ந்த உயரதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

காலை 9.30 இற்கு ஆரம்பமாகி இடம் பெற்ற திருப்பலிப்பூசை மற்றும் ஆராதனை நிகழ்வுகளுக்கு யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் தலைமைதாங்கினார். ஆயிரத்திற்கும் அதிகமான கிறிஸ் தவ மக்களால் பேராலயத்தின் மண் டபம் நிரம்பி இருந்தது.

பிரார்த்தனை நிகழ்வில் நல்லை குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமி களும் கலந்து கொண்டிருந்தார். விடுதலைப்புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம் பரிதி தலைமையிலான அரசியல் துறைப்போராளிகள், கடற்புலிகள் போராளிகள், யாழ். மேல்நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ். வரதராஜா மற்றும் வெகுசன அமைப்புக்களினது பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

மிகவும் அமைதியான முறையில் இடம் பெற்ற இத்திருப்பலி பூசை மற்றும் ஆராதனை நிகழ்வினில் பெருமளவிலான பாடசாலை மாண வர்களும் கலந்து கொண்டனர். இதனிடையே போப்பாண்டவரது மறைவை முன்னிட்டு குடாநாட்டில் முழுஅளவில் வெள்ளிக்கிழமை துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (27)

# அனலைதீவு வைத்தியசாலைக்கு நிரந்தர வைத்தியர் தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். அனலைதீவிலுள்ள அனலைதீவு அரசினர் வைத்தியசாலைக்கு நிரந்தரமாக வைத்திய அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு அப்பகுதி மக்கள் சுகாதாரத் திணைக்களத்திடம் கடிதமூலமான கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளனர்.

மேற்படி வைத்தியசாலைக்கென நிரந்தரமாக வைத்திய அதிகாரி ஒருவர் நியமிக்கப்படாததினால் அவ்வூர் மக்கள் மேற்படி வைத்தியசாலை மூலம் தமது வைத்திய தேவைகளைப்பூர்த்தி செய்துகொள்ள முடியாத நிலைமை உள்ளது.

எனவே இப் பகுதி மக்களது வைத்திய தேவைகளை கருத்தில் கொண்டு இவ் வைத்தியசாலைக்கென ஒருவைத்திய அதிகாரியை நியமிக்குமாறு அப்பகுதி மக்கள் மேலும் கோரியுள்ளனர். (33)

# கடல் வழிப்பயண படகுச் சேவை மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்திலுள்ள ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்குமிடையிலான கடல் வழிப்பயணப்படகுச் சேவை மேலும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் வழமையான சேவைகளை விட முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறையிலிருந்து காரைநகர் நோக்கிய ஒரு படகுச் சேவையும் முற்பகல் 11 மணிக்கு காரைநகரிலிருந்து ஊர்காவற்துறை நோக்கிய ஒருபடகுச் சேவையும் இடம் பெறுவருகிறது.

இதனால்இக்கடல் வழிப்பணிகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகளுக்கு ஓரளவு தீர்வுகாணப்பட்டுள்ளது (33)

# தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் விரிவுரைகளைப் பகிஷ்கரித்துப் போராட்டம்

(நல்லூர்)

யாழ்ப்பாணம் தொழில் நுட்பக் கல்லூரி பகுதிநேர மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ் கரித்து மறியற் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

கடந்த நான்கு மாதங்களாக தமக்கு விரிவுரைகளுக்கான விரிவுரையாளர் கள் நியமிக்கப்படாமை மற்றும் நியமிக்கப்பட்டுள்ள தகுதியற்ற விரிவு ரையாளர்களை நீக்கக் கோரியுமே இப்போராட்டம் நடத்தப்பட்டுள்ளது.

தொழில் நுட்பக்கல்லூரியின் வெளிக்கதவினைப் பூட்டியதுடன் விரிவுரையாளர்கள் உட்செல்லவும் அனுமதிக்கப்படவில்லை. இதேநேரம் பகுதிநேர மாணவர்கள் தமது கல்விக்கான விரிவுரையாளர்களாக பொறியியலாளர்கள் கற்பிக்க வேண்டிய பாடங்களைக் கூட தகுதி யற்ற விரிவுரையாளர்களை நியமனம் செய்துள்ளமை தமது கல்வியைப் பாதிப்படையச் செய்துள்ளதாக குற்றம் சாட்டியுள்ளனர். (33,41)

# நீர்வேலி கண்ணாடித் தொழிற்சாலையை மீண்டும் இயங்கவைக்கக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

நீர்வேலி கண்ணாடித்தொழிற் சாலை மீண்டும் புனரமைத்து இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென தொழிற்சாலை ஊழியர்களின் பொது அமைப்பு சகல தரப்பினருக்கும் வேண்டு கோள் விடுத்துள்ளது.

இத் தொழிற்சாலையில் பணியாற்றி பாதிக்கப்பட்ட ஊழியர் களுக்கு இழப்பீட்டுத்தொகையினை வழங்கு வதுடன் வேலையின்றி குடும்ப வறுமையினால் துயருற்றி ருக்கும் தொழிலாளர்களின் நலன் காக்க மீண்டும் இத்தொழிற்சாலை இயங்க வைக்க வேண்டும் இதன் மூலம் பல இளைஞர்கள், யுவதிகள் தொழில வாய்ப்பினை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர்கள் தெரிவித் துள்ளனர்.

இது சம்பந்தமாக பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.அரசாங்க அதிபர், அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், அரசியல்துறையினர், மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகிய வற்றுக்கு கோரிக்கை மக்களால் கையளிக்கப்பட்டுள்ளன. (28)

# உதவி வழங்கல்

(சாவகச்சேரி)

யாழ்.தென்மராட்சியில் உள்ள சாவகச்சேரி நகரசபையின் கழிவ கற்றும் மற்றும் குழாய் வழங்கும் நடவடிக் கைகளை மேலும் விரிவுபடுத்துவதற் கான உதவிகளை வழங்க நிகொட் திட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. இதனடிப்படையில் நிகொட் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகரசபைக்கு உழவு இயந்திரம் மற்றும் தண்ணீர் பவுசர்கள் என்பன வழங்கப்படவுள்ளன. (33)

# 30 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கல்

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தால் வடமராட்சிப் பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்காக துவிச்சக்கரவண்டிகள் வழங்கப் பட்டன.

நோர்வே தமிழர் புனர்வாழ் வுக்கழக நிதிப்பங்களிப்புடனும், யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ் வுக்கழக முன்பள்ளி கல்விமேம் பாட்டு நிலைய அனுசரணையுடனும், வடமராட்சிக் கரையோரப் பிரதேசத்தில் சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முன்பள்ளி ஆசிரியர் களுக்கு துவிச்சக்கரவண்டி வழங்கும் நிகழ்வு பருத்தித்துறைப் பிரதேச தம்பசிட்டி கிராமத்திலுள்ள காந் தியூர் முன்பள்ளியில் இடம்பெற்றது.

கடந்த ஐந்தாம் திகதி பிற்பகல் 3.30 மணியளவில் முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலைய மக்கள் கட்டமைப்பு உபதலைவர் சிவச் செல்வன் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமானது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளா சு. ஜெயராஜ், புலோலி கிராம அலுவலர் நாகதீப சோதிரூபன், வடமராட்சி தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர் வி. கவிச்செல்வன் ஆகியோர் மங்கல விளக்கினை ஏற்றிவைத்தனர். தொடர்ந்து தமிழர் புனர்வாழ்வுக்கழகக் கொடியை தமிழர் புனர்வாழ்வுக்கழக யாழ். மாவட்ட பணிப்பாளரும், முன்பள்ளிக் கல்வி மேம்பாட்டு நிலையக் கொடியை வடமராட்சி முன்பள்ளி இணைப் பாளர் திருமதி ரவீந்திரனும் ஏற்றிவைத்தனர். அதனைத் தொடர்ந்து சுனாமிப் பேரலை அனர்த்தத்தால் சாவடைந்த முன் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், மற்றும் பொதுமக்கள் ஆகியோருக்கு இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது.

பிரதம விருந்தினராக யாழ். மாவட்டப் பணிப்பாளர் சு.ஜெயராஜ் சிறப்பு விருந்தினர்களாக புலோலி கிராம அலுவலர் நாகதீப சோதிரூபன, சமூக உத்தியோகத்தர் திருமதி லோகராஜா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர். அதனைத் தொடர்ந்து 30 முன்பள்ளி ஆசிரியர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. இவற்றை யாழ். மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழக பணிப்பாளர், புலோலி கிராம அலுவலர், சமூக உத்தியோகத்தர் ஆகியோர் வங்கிவைத்தனர்.

# வழிகாட்டல் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

ஐ.ஐ.எஸ். நிறுவனம் இலங் கையின் தலைசிறந்த சிலிங்கோ நிறுவனத்தின் உயர்கல்விச் செயற்பாட்டிலுள்ள ஐ.சி.பி.ரி நிறுவனத்துடன் இணைந்து ஆரம்பிக்கவிருக்கும் தொழில்நிர்வா கத்தில் முதுமானிக் கற்கை நெறிக்கான ஆரம்ப நிகழ்வும் வழிகாட்டல் கருத்தரங்கும் எதிர்வரும் 16ஆம் திகதி மாலை 3.00 மணிக்கு ஐ.ஐ.எஸ் இன் பிரதான மண்டபத் தில் இயக்குநர் விக்னேஸ்தலை மையில் இடம்பெறவிருக்கிறது. இந்நிகழ்வில் மனிதப் பல்கலைக் கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும் ஐ.சி.பி.ரி நிறுவனத் தின் செயலாளர் ஜெகத் அல்விஸ் மற்றும் பொது முகாமையாளர் மொ கான் பத்திரன மற்றும் நிறுவனத்தின் உயர்மட்டப் பிரதிநிதிகள் அனுரா கமகே, நிரோஜன் மடமிற்றிகே ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

எம்.பி.ரி கற்கைநெறிதொடர்பாக ஆர்வமுடையோர் இக் கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு ஐ.ஐ.எஸ். நிறுவனம் கேட்டுள்ளது. (சு)

# விபரம் திரட்டல்

(வடமராட்சி)

யாழ். வடமராட்சி கிழக்கிலுள்ள மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவில் சுனாமியால் சேதமான வீடு களின் விபரங்களைத் திரட்டும் நட வடிக்கைகளில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஈடுபட்டு வருகின் றனர்.சுனாமியால் சேதமான வீடு களை மீளமைப்பதுடன் புதிய வீடு களை அமைக்கும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கீழான திட்டங் களுக்கான பயனாளிகளைத் தெரிவு செய்வதற்காகவே இவ்விபரச் சேகரிப் புகள் இடம் பெறுகின்றன. (33)

# சிறிய அலைக்கும் ஓடிய மக்களைப் பார்த்தபொழுதுதான் ஆரம்பத்தில் அடித்த அலையின் பரிமாணம் தெரிந்தது

**அன்று திருகோணமலையில் எங்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் இருக்கின்ற கிராமங்களினுள் கடல் பெரிதாக ஏறிவிட்டது என்று செய்தி கிடைத்தது. அதனையடுத்து முல்லைத்தீவின் நிலை என்ன? என்பதை கடற்படை சிறப்புத் தளபதி சூசை அவர்களிடம் கேட்டுத்தெரிந்துகொண்டேன். அதன் பின்னர் எமது படையணிப் போராளிகளையும், வாகனங்களையும் அனுப்பிவிட்டு ஏனையபிரிவுகளுக்கும் தகவலை வழங்கிவிட்டு முல்லைத்தீவுக்குப் போனேன். வட்டுவாகல் பாலத்தடியில் பத்துக்கும் அதிகமான பனைமரங்கள் தடிக்குச்சிகள் மிதப்பதுபோல அங்குமிங்குமாக அலையுடன் அடிபட்டுக்கொண்டிருந்தன. கடலில் எழுகின்ற சிறிய அலைக்குக் கூட பயந்தடித்து ஓடுவதும் திரும்பி வருவதுமாக மக்களின் நிலை இருந்தது. மக்களின் அந்த நிலையை வைத்து முதலில் அடித்த அலையின் பரிமாணத்தை அறியமுடிந்தது எனக் கூறினார் தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியும்,புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டு அம்மான் அவர்கள். சுனாமி அலைகளால் அழிந்து போன முல்லைத்தீவுக்குள் பெரும் சிரமங்களின் மத்தியில் சென்று நிலைமைகளை அவதானித்து ஒழுங்குபடுத்திய அவர் அன்றைய தனது அனுபவங்கள் குறித்து எங்களுடன் பகிர்ந்தவை இந்தப்பகுதியில்...**



## பகுதி–48

**அ.லோகீசன்**

**அன்றையதினம்** வழமைபோல எங்களது வேலைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த பொழுது தொலைத்தொடர்புக்கருவி மூலம் திருகோணமலையில் இருந்து ஒரு அழைப்பு வந்திருந்தது. காலை ஒன்பதுமணிதான் இருக்கும்.அந்த அழைப்பினை ஏற்படுத்தியவர் "திருகோணமலையில் உள்ள எங்களது கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் இருக்கின்ற கிராமங்களுக்குள் கடல் அலை பெரிதாக வந்து ஏறிவிட்டது" என்ற செய்தியைச் சொன்னார்.

திருகோணமலையில் கடல் ஏறியிருந்தால் முல்லைத்தீவும் கடற்கரையோரப்பிரதேசம் என்பதால் இங்கேயும் வந்திருக்குமா? என்று என்னுள் சிந்தித்தபடி முல்லைத்தீவின் நிலைமையை விசாரித்துப் பார்க்கும்படி சொல்லிவிட்டு காத்திருக்க முல்லைததீவின் எந்த நிலையங்களும் தொடர்பில் இல்லை என்று சொன்னார்கள்.

நிலமை இப்படி இருக்க நான் எங்களது உள்ளகப் புலனாய்வுப் பொறுப்பாளர் காந்தியின் தொடர்பை எடுத்தேன். அவர் அவசரமாக முல்லைத்தீவுக்குப் போய்விட்டதாகவும், வோக்கியில் தொடர்பு இல்லாமல் இருப்பதாகவும் சொன்னார்கள். ஒருவரது தொடர்பும் இல்லாதநிலையில் ஏதோ சிக்கல் ஏற்பட்டுவிட்டதாக எனக்குள் ஒரு ஊகம் எழுந்தது. எப்படியாவது முல்லைத்தீவின் நிலையை அறியவேண்டும் என்ற துடிப்புடன் எங்கள் கடற்படைச் சிறப்புத்தளபதி சூசையின் தொடர்பை எடுத்தேன்.

முல்லைத்தீவில் ஏதும் நடந்திருக்குமா? என்ற ஏக்கத்துடன் இருந்த வேளை சூசையின் குரல் மறுபக்கத்திலிருந்து ஒலித்துக்கொண்டிருந்தது.அவரது தொடர்பு கிடைத்தசமயம் அவர் முல்லைத்தீவில் இருக்கவில்லை. அதனை அண்டியபகுதிகளில்தான் நின்றிருப்பார். அங்கிருந்தபடி நான் நிற்கும் பகுதிக் கிராமங்களுக்குள் எல்லாம் தண்ணி ஏறிவிட்டது. நிலமை சிக்கலாய் இருக்கிறது" என்ற செய்தியை எங்களுக்கு முதலாவதாகச் சொன்னார்.

அவரிடம் முல்லைத்தீவு நிலைமையை நான் கேட்டேன். "அங்கு நிலமை சிக்கலாகத்தான் இருக்கும் போல் உள்ளது. நான் விசாரிக்கின்றேன். நீங்களும் விசாரியுங்கள்" என்று சொன்னார்.

நான் நிலைமையை உணர்ந்தபடி அவரிடம் "இப்பொழுது உங்களுக்கு உடனடியாக என்ன செய்யவேண்டும்? நான் வருகிறேன் எந்த இடத்தில் நிற்கிறீர்கள்? எங்கே வருவது?" என்று கேட்டேன்.

அதற்கு அவர் "நீங்கள் வரவேண்டாம் பாதைகள் எல்லாம் தண்ணிர் ஏறிவிட்டது நிலமைசிக்கல்"என்றுசொல்லிக் கொண்டிருந்தார். "சரி அப்படியானால் நான் இப்ப என்ன செய்யவேண்டும்" என்று திரும்பவும்அவரிடம் கேட்டேன்.

"தண்ணீருக்குள் சிக்குப்பட்டுப்போய் இருக்கிற ஆக்களை மீட்டெடுக்கிறதுக்கு ஆளணி உதவியும் வாகன உதவியும் செய்துதாங்கோ" என்று கேட்டார்.

உடனடியாக அரசியல்துறைக்கு "அம்புலன்ஸ் வண்டிகளையும் உள்ளுக்குப் போய்வரக் கூடியமாதிரி உழவு இயந்திரங்களையும் அனுப்புங்கோ" என்று தொலைத்தொடர்புக் கருவி மூலம் அறிவித்துவிட்டு ஏனைய பிரிவுகளுக்கும் அறிவித்தேன்.

இப்படியே அறிவித்துவிட்டு தொலைத்தொடர்புக்கருவி மூலம் எங்களுடைய பிரிவுக்குரிய உழவுஇயந்திரங்களை முதற்கட்டமாக அனுப்பிக்கொண்டிருந்தேன். அதன்பிறகு எங்களுடைய படையணிப் போராளிகளை மீட்பு

## ஆழிப்பேரலைகள் முல்லையில் நடத்திய கோரத்தாண்டவம்

வேலைகளுக்காக அனுப்பிவிட்டு ஏனைய படையணிகளுக்கும் தகவலை அனுப்பிக்கொண்டிருந்தேன்.

மேலதிகமாக பேருந்துகள் தேவைப்பட்டால் பேருந்துதரிப்பு நிலையங்களில் உள்ள பேருந்துகளை எடுக்குமாறு சொல்லிவிட்டு வாகன் உதவியை எதிர்பார்த்து நிதிப்பொறுப்பாளர் பாலதாசுடன் தொடர்பு கொண்டேன். பாலதாசின் தொடர்பும் கிடைத்துவிட்டது.

அவருடன் இதற்குரிய ஒழுங்குகள் பற்றிக் கதைத்துக்கொண்டிருக்க தனக்கும் தகவல் கிடைத்துவிட்டது என்றும் அதற்குரிய ஒழுங்குபடுத்தல்களில் ஈடுபட்டிருப்பதாகவும் சொன்னார்.

இப்படியிருக்க தளபதிகள் அனைவருடனும் தொலைத்தொடர்பு கருவி மூலம் தொடர்பு கொண்டுகதைத்தேன். தளபதி தீபனுடன் கதைக்கின்றபொழுது முல்லைத்தீவு நிலவரம் இப்படித்தான் என்பதை அவருக்கு சொன்னபிறகு வடமராட்சி கிழக்கின் நிலவரம் எப்படி? என்று கேட்டேன்.

அவர் எனக்கு " கிராமங்களுக்குள் தண்ணீர் புகுந்துவிட்டது பல இடங்களில் நூறு, இருநூறு மீற்றருக்குள் இருந்த வீடுகளுக்குள் இருந்த மக்களைக் கடற்தண்ணீர்பேரலையாக எழுந்து அள்ளிக்கொண்டு போய்விட்டது" என்ற தகவலைச் சொல்லிக்கொண்டிருந்தார்.

ஆனால் உண்மையில் இவ்வளவுபெரும் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக அப்பொழுது நான் உணர்ந்திருக்கவில்லை.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்களை மீட்பதற்காக ஆளணி மற்றும் வாகன ஒழுங்குகளை செய்துகொண்டிருக்க காந்தி என்னுடன் தொடர்பு கொண்டு முல்லைத்தீவுச் சம்பவத்தை சொல்லி முடித்துவிட்டு அடுத்த கட்டமாக தான் முல்லைத்தீவுக்குள் போகப்போவதாக என்னிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

உடனடியாக "நானும் வருகிறேன்; நீ என்னிடம் வா இருவரும் சேர்ந்து போவோம்; என்ற தகவலை சொல்லிஅவரைக்கூப்பிட்டு நாங்கள் இருவரும் சேர்ந்து முல்லைத்தீவுக்குப் புறப்பட்டு போய்க்கொண்டிருந்தோம். காவல்துறையினரின் வாகனங்கள் வெளிச்சம் போட்டவாறு போக்குவரத்து நெருக்கடிகளை குறைத்தபடி காயக்காறரையும் உடல்களையும் ஏற்றிக்கொண்டு புதுக்குடியிருப்பை நோக்கி வேகமாக போய்க் கொண்டிருந்தன.

வட்டுவாகல் பாலத்திற்குப் போய்ச்சேர்ந்த பொழுது பாலதாஸ் அங்கு நின்று கொண்டிருந்தார். நாங்கள் போய் சேர்ந்த முதலாவது சுனாமிக்களம் வட்டுவாகலாகத்தான் இருந்தது.

பாலம் பாவனைக்கில்லாதபடி பனைமரங்களாலும் செடிகளாலும் மூடப்பட்டிருந்தது. அவற்றை அகற்றி போக்குவரத்தைச் சீர்செய்வதற்காக காவல்துறையினர் மரங்களையும் செடிகளையும் அகற்றிக் கொண்டிருந்தனர். அதுவரை பாலத்தினூடான போக்குவரத்து தொடங்கமுடியாது என்கிற நிலைதான் இருந்தது.

கடலில் இருந்து அலைகள் தொடர்ச்சியாக வந்து போய்க்கொண்டிருந்தன.

ஒவ்வொரு சின்ன அலைக்கும்கூட சனங்கள் பயந்து ஓடுவதும் திரும்பி வருவதுமாக இருந்தார்கள். அலையையும் அதைக்கண்டு ஓடிப்போய் திரும்பிவருகின்ற மக்களையும் பார்க்கின்றபொழுதுதான் ஆரம்பத்தில் அடித்த அலையின் பரிமாணத்தை அறியமுடிந்தது.

பாலத்துக்குப்போனபோதுதான் அனர்த்தத்தின் தாக்கம் தெரிந்தது. பெரிய பனை மரங்கள் எல்லாம் குச்சிகள் மிதப்பது போல கடல்நீரில் மிதந்தபடி இருந்தன.

இப்படி மிதந்தபடி இருந்த பனைமரங்கள் சர்வசாதாரணமாக போய்வந்து கொண்டிருந்தன. பாலத்தடியில் இருந்து கடலைநோக்கிப் போய்க் கொண்டிருந்த பனைமரங்கள் அலையுடன் சேர்ந்து அதேவேகத்தில் திரும்பி வந்து பாலத்துடன் அடிபட்டு கொண்டிருந்தன. இப்படி பத்துக்கும் அதிகமான பனைமரங்கள் பாலத்துக்கும் கடலுக்கும் இடையில் அங்கும் இங்குமாக போய்வந்து கொண்டிருந்தன. அந்தளவுக்கு அலையின் தாக்கம் இருந்தது.

பாலத்தைக்கடந்து மறுகரைக்குப் போய்ச் சேர்ந்துவிட்டோம்.

இப்போது பாலத்தடியில் நிதித்துறையினரும் காவல்துறையினரும் இணைந்துநிலைமைகளைச் சீராக்கிக்கொண்டிருந்தனர். பாலதாஸ் பாலத்தில் நின்று சரியான ஒழுங்குகளைச் செய்துகொண்டிருந்தார்.

அந்தப் பகுதியில் நின்ற மக்கள் அனைவரும் பயந்தபடி இருந்தார்கள். வேடிக்கை பார்க்க வந்தவர்கள் அழிவின் பரிமாணம் என்ன? எப்படி? என்று எதுவும் தெரியாமல் இருந்தார்கள்.

வட்டுவாகல் பாலத்தடியில் இருந்து முல்லை நகருக்குள் செல்கின்ற பொழுது அந்தப் பிரதேசத்தின் நிலை எப்படியிருந்தது? எவ்வாறு நகரைச் சென்றடைந்தார்கள் போன்ற விடயங்களைப் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளர் பொட்டுஅம்மான் அவர்கள் அடுத்த பகுதியில் பகிர்ந்துகொள்வார்.

தொடரும்.






**31.03.2005 - 06.04.2005**

**31.**

☞ இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் இடம்பெற்ற ஹெலி விபத்தில் ஹரியானா மாநில அமைச்சர்களான ஓ.பி.ஜின்தால் சுரிந்திரசிங் ஆகியோர் பலி.

☞ கம்போடியாவின் வட மேற்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஆயுதக் களஞ்சிய சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 5 பேர் பலி,ஆயிரக் கணக்கான மக்கள் வெளியேற்றம்.

☞ தூத்துக்குடிப் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டதில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றம்.



☞ இந்தோனேஷியாவின் நியாஸ்தீவில் நில அதிர்வு ஏற்பட்டதில் மக்கள் பெரும் பதற்றம் நிலநடுக்கம், ரிச்டர் அளவுகோலில் 6.3 புள்ளியாக பதிவானது.

☞ இந்தியா-மொரிசியஸ் இடையே நான்கு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின இந்திய பிரதமர் மன்மோகன்சிங் மொரிசியஸ் பிரதமர் பால்ரெய்மாண்ட் ஆகியோர் முன்னிலையில் இவ் ஒப்பந்தம் கைச்சாத்தானது.



☞ 15 ஆண்டுகளாக மரணத்துடன் போராடிய அமெரிக்கப் பெண்ணான டெர்ரிஷியாவோ மரணம். அமெரிக்காவில் புளோரிடா மாநிலத்தைச் சேர்ந்த 41 வயதான அப் பெண்ணுக்கு 1990 ஆம் ஆண்டு மாரடைப்பு ஏற்பட்டு மூளைசெயலிழந்தமை குறிப்பிடத்தக்கது.



☞ சுமாத்திராத்தீவில் சில இடங்களில் நில நடுக்கம் காரணமாக 650 இற்கும் அதிகமானோர் பலி,நில நடுக்கம் ரிச்டர்அளவு கோலில் 5.1 புள்ளியாக பதிவாகியிருந்தது.



☞ சங்கரராமன் கொலை தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருக்கும் மடாதிபதிகளான ஜெயந்திரர், விஜேயந்திரர் உட்பட 24 பேருக்கு குற்றப்பத்திரிகை வழங்கப்பட்டது. இக் குற்றப்பத்திரிகை பெறவந்தபோது சங்கராச்சாரியார்களுக்கு எதிரான ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.



☞ தென் அல்பேனிய மலைப் பிரதேசத்தில் அமெரிக்க இராணுவ உலங்குவானூர்தி விபத்துக் குள்ளானதில் அமெரிக்க இராணுவ வீரர் ஒன்பதுபேர் பலி.

**01.**

☞ இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் வானொன்றும்,உழவு இயந்திரம் ஒன்றும் மோதுண்டதில் 18 பேர் பலி; நான்கு பேர் காயம்.

☞ இஸ்ரேலின் மேற்குக்கரை நப்லஸ் நகருக்குச் செல்லும் வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 8 பேர் பலி; 21 பேர் காயம்.



**02.**

☞ இந்தோனேஷியாவின் நியாஸ் தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.8 புள்ளியாக பதிவாகியுள்ளது.

☞ ஈராக்கின் பகுபாநகர் அருகே காண்பனிசாத் எனுமிடத்தில் வாகனக்குண்டு



வெடித்ததில் ஐந்துபேர் பலி.

☞ சிம்பாவே பாராளுமன்றத் தேர்தலில் சனாதிபதி ரொபர்ட் முகாபேயின் ஆளுங்கட்சி 71 ஆசனங்களைப் பெற்று வெற்றி பெற்றது. இதனையடுத்து முக்கிய நகரங்களில் வெற்றிவிழா ஊர் வலங்கள் நடத்தினர்.

☞ இந்தோனேஷியாவின் நியாஸ் தீவில் குனங்சிட்டொலிக் கருகில் உலங்குவானூர்தி ஒன்று விபத்துக்குள்ளானதில் ஒன்பது அவுஸ்திரேலிய வீரர்கள் பலி.



☞ பாகிஸ்தானில் இருந்து ஆப்கானுக்கு ஜீப்களை ஏற்றிச் சென்ற டிரக்குகள் மீது தலிபான்கள் தாக்குதல் நடத்தியதில் மூன்று சாரதிகள் பலி.

☞ இந்தோனேஷியாவின் நியாஸ் தீவில் நிலநடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.8 புள்ளியாகப் பதிவாகியது.

**03.**

☞ உலகக் கத்தோலிக்க மதத்தலைவர் பாப்பரசர் இரண்டாம் ஜோன்போல் காலமானார்.



☞ தாய்லாந்தின் தென்பகுதியில் ஹட்யாயில் உள்ள விமான நிலையத்தில் இடம்பெற்ற குண்டுவெடிப்புச் சம்பவத்தில் மூன்று பேர் பலி.



☞ ஈராக் தலைநகர் பாத்தாத்தில் அமைந்துள்ள அபுகிராப் சிறைச்சாலையில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் ஆறுபேர் பலி,44 துருப்பினரும் 12 கைதிகளும் காயமடைந்தனர்.



☞ இந்தோனேஷியாவின் நியாஸ் தீவில் குணுங்சிட்டோலி நகரில் மீண்டும் பூகம்பம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோளில் 6.1 புள்ளியாக ஏற்பட்டது.

☞ ஈரானின் கெர்மான் மாகாணத்தின் ராவர் நகரில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் 15 பேர் காயமடைந்தனர். ரிச்டர் அளவு கோலில் 4.1 புள்ளியாகப் பதிவானது.

**04.**

☞ சவுதி பாதுகாப்புப் படைகளுக்கும் துப்பாக்கி தாரிகளுக்குமிடையே ஏற்பட்ட சண்டையில் எட்டு துப்பாக்கிதாரிகள் பலி.

☞ சவுதியரேபியாவின் வடக்குப்பகுதியில் வீடொன்றினுள் மறைந்திருந்த கிளர்ச்சிவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் மூவரை பொலிஸ் அதிகாரிகள் சுட்டுக் கொன்றனர். இதன்பின் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 15 அதிகாரிகள் காயம்.

**05.**

☞ இந்தியாவில் தொடர்மழை பெய்தமையால் சென்னையிலிருந்த ஐந்து மாடிக்கட்டடம் ஒன்று இடிந்து விழுந்ததில் கட்டடவேலையில் ஈடுபட்டிருந்த நான்கு தொழிலாளர்கள் பலி; பலர் படுகாயம்.

☞ சுவீடன் நாட்டில் ஸ்டாக்ஹோமில் உள்ள சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் கைதிகள் உடற்பயிற்சி செய்யவும், படுமாறு தூக்கவும் அனுமதிமறுக்கப்பட்டதை எதிர்த்து கைதிகள் போராட்டம் நடத்தினர்.

☞ பாக்தாத் சர்வதேச விமான நிலையத்திற் கருகிலுள்ள இராணுவக் காவலரணுக்கருகில் கார்க்குண்டொன்று வெடித்ததில் ஒருவர் பலி.

**06.**

☞ மொனாக்கோவின் இளவரசர் ரேய்னியர் 81 வயதில் காலமானார்.

☞ ஈராக்கின் புதிய சனாதிபதியாக குர்திஷ் இனமக்களின் தலைவர் ஜலால் தலபானி தெரிவு செய்யப்பட்டார்.

☞ ஆப்கானிஸ்தான் தென்கிழக்குப் பகுதியில் அமெரிக்க இராணுவ உலங்கு வானூர்தியான சி-எச்-47-ரக உலங்குவானூர்திகளுக்கு தெற்கே வழமையான சேவையில் ஈடுபட்டிருந்த சமயம் விபத்துக்குள்ளானதில் 16 படையினர் பலி.

☞ கொலம்பியாவிலுள்ள கிழக்கு மாகாணமான அரவுசாவில் போர்முல் நகருக்கும், டேம் நகருக்குமிடையில் மார்க்சீய தீவிரவாதிகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதல்களில் 17 கொலம்பிய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டார்கள்.



## மாவட்ட அமைப்பாளராக எஸ்.பி. மீண்டும் நியமனம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரேலியா மாவட்ட அமைப்பாளராக மீண்டும் எஸ்.பி.திஸாநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் தொடர்பாக சிறைத் தண்டனை அனுபவித்துவரும் ஐக்கிய தேசியக்கட்சியின் தேசிய அமைப்பாளர் எஸ்.பி. திஸாநாயக்கவிற்கு எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருப் பதாக அக்கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய தேசியக் கட்சியின் நுவரேலியா மாவட்ட அமைப்பாளராக நவீன் திஸாநாயக்க நியமிக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தபோதும், நவீன் திஸாநாயக்க அந்தத்தகவலை நிராகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜே.வி.பி பா.உ கைதாகி விடுதலை

ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த வீரசேகர கைது செய்யப்பட்டு பிணையில் அனுமதிக்கப் பட்டுள்ளார். இந்தச்சம்பவம் கடந்த வெள்ளியன்று இடம்பெற்றுள்ளது.

டெங்கு நோய் தொடர்பில் சுகாதார அதிகாரி ஒருவரை அச்சுறுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அவர் கந்தளாய் நீதிமன்ற கட்டடத் தொகுதியில் இரண்டு மணிநேரம் கைது செய்யப் பட்டு பின்னர் பிணையில் அனுமதிக்கப்பட்டார்.

ஏற்கனவே பாராளுமன்ற உறுப்பினருக்கு இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் அழைப்பாணை விடுவிக்கப்பட்டிருந்த போதும் அவர் உரிய வகையில் நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்க வில்லை. இதனையடுத்தே அவர் கைதுசெய்யப்பட்டார். (32)

உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சு
வடக்கு கிழக்கு மாகாண சபை

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டம் (காரப்)

நிதி– ஆசிய அபிவிருத்தி வங்கி
ஆ.அ.வ கடன் இல: 2043–சிறீ (எஸ்எவ்)

# கேள்வி அறிவித்தல் - இல: 40

01 போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டத்தின் (CAARP) ஆகுசெலவு சார்பாகப் பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து ('' ஆ.அ.வ'') கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோக்கிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02 இதன் பின்னால் தொழில்தருனராக குறிப்பிடப்படும் NECORD திட்டக் கேள்விச் சபைத் தலைவரால் பின்வரும் வேலைகளுக்கு தகுதிவாய்ந்த ஒப்பந்தக் காரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

**அட்டவணை**

| தொ இல | ஒப்பந்த இனங் காட்டல் இல. | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக் குறைந்த ICTADபதிவு | கேள்விப்பிணைப் பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | BT/CAARP/IR/01 தொகுதி - 1 | மட்டக்களப்பு, மீயன்கல்லுக்குளம் நீர்ப்பாசனத்திட்ட முதன்மை வேலைகள் புனரமைப்பு | M4 நீர்ப்பாசனம் | 385,580/= |
| 02 | BT/CAARP/IR/01 தொகுதி - 2 | மட்டக்களப்பு, மீயன்கல்லுக்குளம் நீர்ப்பாசனத்திட்டக்கால்வாய் வேலைகள் புனரமைப்பு | M7 நீர்ப்பாசனம் | 23,710/= |
| 03 | VA/CAARP/IR/03 தொகுதி - 1 | வவுனியா, மாளிகைக்குளம் நீர்ப்பாசனத்திட்டக் முதன்மை வேலைகள் புனரமைப்பு | M6 நீர்ப்பாசனம் | 58,900/= |
| 04 | VA/CAARP/IR/03 தொகுதி - 2 | வவுனியா, மாளிகைக்குளம் நீர்ப்பாசனத்திட்ட வேலைகள் புனரமைப்பு | M7 நீர்ப்பாசனம் | 35,800/= |

03 பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தக்காரர்களும் கேள்வி கோருவதற்குத் தகுதியுடையவர்கள்.

I நிர்மாணப் பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் பதிவு,தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்யப்பட்டிருந்தல் வேண்டும்.

II இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தக்காரர் சங்கத்தின் (இ.தே.நி.ஒ.ச) உறுப்பினராக (ICTAD டுடன் M 7இற்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக் குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். அல்லது கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை மாவட்டங்களில் 2003.07.01 ஆம் திகதிக்குப் பின்பு தங்களை ஒப்பந்தக்காரர்களாகப் பதிவு செய்து ஒத்த தன்மையான வேலைகளை நல்லமுறையில் செய்துமுடித்தவர்களாக இருக்க வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்தோ அல்லது உசாவலர்களிடமிருந்தோ பெறப்பட்ட திருப்திகரமான சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின் போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்குமாறு கேள்வி கோருவோர் வேண்டப்படுகின்றனர்.

IV "ICTAD"வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V ஒப்பந்தக்காரர் மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்குத் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் அடங்கலாகாது.

VI கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பிக்கக் கூடியவராக இருக்க வேண்டும்.

04 ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் CAARP வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05 ஆர்வமுள்ள தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் கேள்வி தொடர்பான மேலதிக தகவல்களை 55, கந்தசுவாமி கோவில்வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி:026-2227434, பக்ஸ்:026-2227401,இணயதள முகவரி: www.necord.org ஈ-மெயில் necord @sltnet.lk.)

06 கேள்வி ஆவணங்களை 11.04.2005 இலிருந்து 27.04.2005 வரை காலை 9.30 இலிருந்து மாலை 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணத்தின் கொடுப்பனவு ரூபா 1000 ஐச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

07 பொறிவைத்த கேள்விகள்யாவும் தலைவர், திட்ட கேள்விச்சபை, "நிகொட"55 , கந்தசுவாமி கோவில் வீதி, திருகோணமலை என்ற விலாசமிடப்பட்டு 02.05.2005 காலை 11.30 மணிக்கு முன்பதாகக் கிடைக்க வேண்டும். இதன் பின்னர் உடனடியாகக் கேள்விகள் திறக்கப்படும். அப்பொழுது கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமூகமளிக்க முடியும்.

08 முன்கூட்டியே கேள்வி கோரல் பற்றிய கூட்டமொன்று எமது அலுவலகத்தில் 27.04.2005 ஆம் திகதி அன்று காலை 11.30இற்கு நடைபெறும்.

09 இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் தனியாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்வியையும் கேள்வி கோருவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இதன் தொடர்பாக பந்தி 7 இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றுக்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

10 கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்கு தொழில்தருநர் பொறுப்பாகமாட்டார்.

**த.லங்காநேசன்,**
**தலைவர் கேள்விச்சபை,**
**நிகொட் திட்டம்,**
**55, கந்தசுவாமி கோவில் வீதி,**
**திருகோணமலை.**

(சி.11675)

# காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசவே இந்தியா செல்கிறேன் - முஷாரப்

" கிரிக்கெட் பார்ப்பது எனக்குமுக்கியமல்ல காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசவே இந்தியா செல்கிறேன்'' என பாகிஸ்தான் அதிபர் முஷாரப் தெரிவித்துள்ளார். பாகிஸ்தான் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இந்திய கிரிக்கெட் அணியுடன் விளையாடி வருகிறது அதில் ஒரு போட்டியை பார்க்க விரும்பம் தெரிவித்த பாகிஸ்தான் அதிபர் இந்தியா செல்ல முடிவெடுத்தார். அதன்படி வரும் 17ஆம் திகதி டெல்லியில் நடைபெறும் ஒரு நாள் போட்டியில் பார்வை யாளராக வரமுஷாரப்பிற்கு இந்தியா அழைத்திருந்தது.

இந்நிலையில் நேற்று முன்தினம் பாகிஸ்தானில் கருத்து தெரிவித்த முஷாரப்அடுத்த வாரம் எனது 2நாள் இந்திய பயனத்தின்போது பிரதமர் மன்மோகன்சிங்குடன் காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசுவேன். கிரிக்கெட் போட்டியை பார்பதை விட காஷ்மீர் பிரச்சினை பற்றி பேசுவதில்தான் நான் அதிக ஈடுபாடுடன் இருக்கிறேன். அதுதான் எனக்கு முக்கியமானது இந்தியாவில் கிரிக்கெட் போட்டியை பார்க்க வருகிற 16ஆம் திகதி போகிறேன். ஸ்ரீநகர்- முசாபராபாத் இடையே பஸ் போக்குவரத்து தொடங்கியது நல்ல நடவடிக்கை தான் ஆனால் அது காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாது அது காஷ்மீர் பிரச்சினையை தீர்ப்பதற்கான ஒரு படி அல்ல. நம்பிக்கையூட்டும் நடவடிக்கைக்கான ஒரு படிதான் என்றார்.

# இரு இந்தியர்கள் விண்வெளியில் உல்லாசம்

விஞ்ஞானிகள் மட்டும் சென்று வந்த விண்வெளி பயணம் தற்போது மற்றவர்களும் உல்லாசப் பயணமாக செல்லக்கூடிய அளவுக்கு மாறிவிட்டது. ஏற்கனவே 2001 ஆம் ஆண்டில் அமெரிக்க தொழில் அதிபர் டென்னிஸ் டைடோவும், 2002ஆம் ஆண்டு ஆபிரிக்காவைச் சேர்ந்த மார்ச்ஷட்டில் நர்த்தும் விண்வெளியில் உல்லாசப்பயணம் மேற்கொண்டனர். இதையடுத்து இரண்டு இந்தியர்கள் விண்வெளியில் உல்லாசப்பயணம் மேற்கொள்கிறார்கள். இதற்காக இந்திய தொழில் அதிபர் இரண்டு பேர் முன்பதிவு செய்து உள்ளனர். அவர்களது பெயர் விபரம் வெளியிடப்படவில்லை 2007ஆம் ஆண்டில் இவர்கள் விண்வெளியில் பயணம் செய்யவுள்ளனர்.

விண்வெளியில் உல்லாசப்பயணத்துக்கான கட்டணம் எவ்வளவு தெரியுமா? ஒரு நபருக்கு 90 கோடி இந்திய ரூபாய் ஆகும். இந்த தொகையை இரண்டு இந்தியர்களும் செலுத்தி விண்வெளியில் பயணம் செய்கிறார்கள். அவர்கள் 8நாட்கள் அங்கு தங்கி இருப்பார்கள் என தெரிகிறது.

## ஓராண்டு நினைவு அஞ்சலி



மலர்வு 02 - 10 - 1924

உதிர்வு 23 - 03 - 2004

திதி:- 11 - 04 - 2005

### அமரர் குழந்தை-வள்ளிப்பிள்ளை

ஆண்டு இன்று ஒன்றாகிப் போனதம்மா
எம் மனங்கள் இன்னும் கலங்குகிறதே.
கலகலக்கும் உங்கள் குரல் ஓய்ந்ததம்மா.
கண் முன்னே மலை ஒன்று சரிந்ததுவே
இல்லத்தின் விளக்காக உறவுகளின் விழுதாக
வாழ்ந்த எம் குல தெய்வமே – அம்மாச்சி!
ஆண்டு பல சென்றாலும் ஆறாத நினைவுகளுடன்
ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறோம் இறையை.
ஓம் சாந்தி! ஓம்சாந்தி! ஓம்சாந்தி!

த.முகவரி:
மயில்வாகனபுரம்
பிரமந்தனாறு.

பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(5988)

## 08 ஆம் ஆண்டு நினைவலைகள்



தாயின் மடியில் 10 - 10 - 1979

தாயக மண்ணில் 11 - 04 - 1997

### கடற்புலி 2ஆம் லெப். குவேதா

(அருளம்பலம் அஜீவா)

கோண்டாவில் - யாழ்.

உயிராகி உணர்வாகி உரமாகிவிட்டவளே
தாயகத்தின் திருவுளமாய்
தமிழினத்தின் சுடரொளியாய்
மண்ணின் விடுதலைக்காய் விதையான வேங்கையே

இந்நாளில் நினைவு கூரும்
அண்ணன் பிறின்ஸ்

(5985)


## புதுவருட சிறப்புத்தள்ளுபடி விலையில் புதிய கணனித்தொகுதிகள்

ATX High Quality Tower Casing
Intel 2.4 GHz P4 Processor
Intel Chipset Motherboard
256 MB DDR Memory
40GB Hard Disk Drive
1.44MB Floppy Disk Drive
Onboard VGA
Onboard Sound&Network
52XCD Rom Drive(LG)
15'' View Sonic/LG Monitor
Enhanced Keyboard
Scroll Mouse

Free!!!
600VA UPS & 2.1 SUBWOOFER
OR
COMPUTER TABLE

ATX High Quality Tower Casing
Intel 2.4 GHz P4 Processor
Intel Chipset Motherboard
128 MB DDR Memory
40GB Hard Disk Drive
1.44MB Floppy Disk Drive
32MB VGA Card
Onboard Sound&Network
52XCD Rom Drive(LG)
15'' View Sonic/LG Monitor
Enhanced Keyboard
Scroll Mouse

Just For
Rs.49999

11-04-2005 21-04-2005

ATX High Quality Tower Casing
Intel Celeron 2.4 GHz Processor
Intel Chipset Motherboard
256 MB DDR Memory
40GB Hard Disk Drive
1.44MB Floppy Disk Drive
Onboard VGA
Onboard Sound&Network
52XCD Rom Drive(LG)
15'' View Sonic/LG Monitor
Enhanced Keyboard
Scroll Mouse



Free!!!
2.1 SUBWOOFER, 600VA UPS
&CANON COLOUR PRINTER
OR
2.1 SUBWOOFER, 600VA UPS
&DVD ROM+CD WRITER

ATX High Quality Tower Casing
Intel Celeron 2.4 GHz Processor
Intel Chipset Motherboard
128 MB DDR Memory
40GB Hard Disk Drive
1.44MB Floppy Disk Drive
32MB VGA Card
Onboard Sound&Network
52XCD Rom Drive(LG)
15'' View Sonic/LG Monitor
Enhanced Keyboard
Scroll Mouse

NORTHERN TECHNOLOGY(PVT)LTD
NO-52, 2nd Cross Street-Vavuniya. T.P: 024-222 1649,4588044 (சி-11497)

# இரட்டைச் சதவாய்ப்பை இழந்தார் லாறா

## மே.தீவு முதல் இனிங்சில் 347 ஓட்டம்





தென்னாபிரிக்க-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையில் போர்ட்டப் ஸ்பெயினில் நடைபெற்றுவரும் இரண் டாவது டெஸ்ட் போட்டியில் முதலில் ஆடிய மேற்கிந்தியத்தீவு அணி தனது முதல் இனிங்சிற்காக 347 ஓட்டங் களைப் பெற்றது.

முதல் நாள் ஆட்ட நேர முடிவில் ஆறு விக்கெட் இழப்பிற்கு 281 ஓட்டம் என்ற நிலையில் இரண்டாம் நாள் ஆட் டத்தைத் தொடர்ந்தது. ஆட்டமிழக்காது 159 ஓட்டத்துடன் இருந்த லாறா இரட் டைச் சதம் அடிப்பார் என்று எதிர்பார்க் கப்பட்டது. ஆனால் அவர் 196 ஓட்டங் களுடன் ஆட்டமிழந்தார்.



இந்நிலையில், மேற்கிந்தியத்தீவு அணி முதல் இனிங்சில் 347 ஓட்டம் குவித்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பந்து வீச்சில் நிற்றினி 95 ஓட்டங்களைக் கொடுத்து ஆறு விக்கெட்டுக்களைச் சாய்த்தார்.

பின்னர் தென்னாபிரிக்கா முதல் இனிங்சை விளையாடியது. அந்த அணித் தலைவர் சிமித் பொறுப்புடன் விளையாடினார். ஆட்ட நேர முடிவில் தென்னாபிரிக்கா மூன்று விக்கெட் இழப்பிற்கு 182 ஓட்டம் எடுத்திருந்தது.

சிமித் 90 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். டிவிலியர்ஸ் 33 ஓட்டங்களிலும், ரூடால்ப் எட்டு ஓட்டங்களிலும், கலிஸ் 39 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். பந்து வீச்சில் பிரேவோ இரண்டு விக்கெட்டுக்களையும், கிங் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

## பிற்போடப்பட்டது

தமிழீழ விளையாட்டுத்துறையின் கிளி. மாவட்டப் பிரிவும், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையும் இணைந்து கிளி. வலயப் பாடசாலை மட்டத்தில் நாளை நடாத்தப்பெறவிருந்த துவிச்சக்கரவண்டி மற்றும் மரதன் ஓட்டப் போட்டிகள் தவிர்க்க முடியாத காரணத்தினால் நடைபெறமாட்டாதென கிளி.மாவட்ட தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் ராஜா தெரிவித்துள்ளார். மேற்படி போட்டிகள் மீண்டும் நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படுமெனவும் தெரிவித்துள்ளார். (சோ)

## கரப்பந்தாட்டப் போட்டி

யாழ். வலயக் கல்விப் பணிமனையால் நடாத்தப்படும் 15, 17,19 வயதிற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 15,16,17ஆம் திகதிகளில் நீர்வேலி அகத்தியர் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் எனக் கல்விப் பணிமனை அறிவித்துள்ளது. (33)

## இன்றைய கால்பந்து போட்டி

எல்லைப்படை மாவீரர் நினைவாகவும், சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறார்களின் கல்வி வளர்ச்சிக்காகவும் தமிழீழ விளையாட்டுத் துறையின் யாழ். மாவட்டப் பிரிவின் ஆதரவுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் நடத்திவரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் சுன்னாகம் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள காலிறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு,

பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த பொமேர்ஸ் விளையாட்டுக்கழம் எதிர் யாழ். லீக்கைச் சேர்ந்த சென்மேரிஸ் விளையாட்டுக்கழகம்.

பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த மணற்காடு அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் எதிர் பருத்தித்துறை லீக்கைச் சேர்ந்த மனோகரா விளையாட்டுக்கழகம். (41)

## பாசிக்லோம்ப் டென்னிஸ் தொடர் அரையிறுதிக்கு டேவன்போர்ட்



பாசிக் லோம்ப் டென்னிஸ் தொடரில் டேவேன்போர்ட் அரையிறுதிக்கு முன்னேறினார். அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் இத்தொடர் நடக்கிறது. காலிறுதிச் சுற்றுப்போட்டிகள் கடந்த வெள்ளியன்று நடந்தன. இதில் நடப்பு சம்பியனான அமெரிக்காவின் டேவன்போர்ட், சக நாட்டு வீராங்கனையான வீனஸ் வில்லியம்சை எதிர்த்து விளையாடினார். இப்போட்டியில் டேவன் போர்ட் 1-6,6-3,6-4 என்ற செட்களில் வெற்றி பெற்றார். மற்றொரு போட்டியில் அமெரிக்காவின் செரினா வில்லியம்ஸ், இத்தாலியின் செவிலா பரினாவை எதிர்த்து விளையாடினார். இப்போட்டியில் முதல் செட்டை 7-5 என்ற கணக்கில் கைப்பற்றிய செரினா, இரண்டாவது செட்டை 6-7 என்ற கணக்கில் இழந்தார். இந்நிலையில் கணுக்கால் காயம் காரணமாக இவர் போட்டியிலிருந்து விலகிக் கொள்ள செவிலா அரையிறுதிக்கு முன்னேறினார்.

## இஸ்லாமிய ஒலிம்பிக் ஆரம்பம்

## ஆறாயிரம் வீரர்கள்; பெண்கள் இல்லை

ஐம்பத்தைந்து நாடுகள் பங்கேற்கும் இஸ்லாமிய விளையாட்டுப் போட்டிகள் சவுதி அரேபியாவில் உள்ள மக்காவில் பிரமாண்டமாகத் தொடங்கியது. முஸ்லிம் நாடுகளில் உள்ள விளையாட்டுத் திறமைகளை வெளிச்சமிட்டுக் காட்டும் நோக்கில் இஸ்லாமிய விளையாட்டுப் போட்டிகள்' முதன் முறையாக நடத்தப்படுகிறது. முதல் போட்டி சவுதி அரேபியாவில் நடக்கிறது.இதற்கான பிரமாண்ட தொடக்க விழா, முஸ்லிம்களின் புனித நகரான மக்காவில் கடந்த வெள்ளியன்று கோலாகலமாக நடந்தது. மக்கா நகர இளவரசர் அப்துல் மஜித் பின் அப்துல் அஜீஸ் விழாவைத் தொடக்கி வைத்தார்.

மொத்தம் 55 நாடுகளைச் சேர்ந்த ஆறாயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் பங்கேற்கின்றனர். நேற்று முன்தினம் தொடங்கி, வரும் 20 ஆம் திகதி வரை மக்கா, மதினா, ஜிட்டமற்றும் தைப் ஆகிய நான்கு நகரங்களில் போட்டிகள் நடக்கின்றன. நீச்சல் டென்னிஸ், வில் வித்தை, பளுதூக்குதல்,கால்பந்து, கரப்பந்து, கூடைப்பந்து, காரத்தே, தடகளம் உள்ளிட்ட அனைத்துப்போட்டிகளும் நடக்கின்றன.

ஒலிம்பிக் போட்டிகளைப் போலவே இவையும் நான்காண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும். ஒலிம்பிக் போட்டிகளுக்கு அடுத்த மிகப்பெரிய விளையாட்டுத் திருவிழாவாக இதை மாற்றவேண்டும் என்பது போட்டி அமைப்பாளர்களின் இலக்கு. "இஸ்லாமிய ஒலிம்பிக்" எனவும் இந்தப்போட்டி அழைக்கப்படுகிறது.



கால்பந்து போட்டிகள் என்றாலே களத்தில் மோதலும் இருக்கும், இங்கே இன்டர்மிலன் வீரர் இவா கார்டோபா (வலது) ஏ.சி.மிலன் வீரர் ஹெர்னன் கிரஸ்போ மீது பாய்ந்து பந்தை தடுப்பது 'சம்பியன்ஸ் லீக்' காலிறுதிப்போட்டியில் இந்த போட்டியில் ஏ.சி. மிலன் 2-0 என்ற கோல் கணக்கில் வென்றது (இடம்) மிலன்.

## 14ஆம் ஆண்டு நிறைவில் கபடிப் போட்டி



சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் 14ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு போராளிகளுக்கிடையிலான கபடிப் போட்டி நேற்று வெகுசிறப்பாக நடைபெற்றது.

மாலை 4.30 மணியளவில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்ட மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணிப் போராளிகளின் கபடி அணிகள் போட்டியிட்டன. இந்நாளை முன்னிட்டு ஒழுங்கமைக்கப்பட்ட இப்போட்டியின் இறுதிச் சுற்றே நேற்று நடைபெற்றது.

இதில் வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், தளபதிகளில் ஒருவரான ஜெரி மற்றும் தமிழீழ கடற்படைத் தளபதிகளில் ஒருவரான செழியன் ஆகியோர் கைலாகு கொடுத்து வீரர்களை ஊக்குவித்ததோடு, கேணல் தீபன் போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

இதில் வெற்றிபெற்ற அணிக்கு வெற்றிக்கிண்ணத்தை தளபதி செழியன் வழங்கிக் கௌரவித்தார். (ச,தீ)

## ஜம்ஷெட்பூர் ஒருநாள் போட்டி வீரர்களைப் பாராட்டுகிறார் இன்சமாம்



ஜம்ஷெட்பூர் மைதானம் தமக்கு எப்போதும் அதிர்ஷ்டமான களமாகவே இருக்கின்றதென மூன்றாவது ஒரு நாள் போட்டியில் இந்தியாவை வீழ்த்திய பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம் உல்-ஹக் தெரிவித்துள்ளார்.

தொடரின் வெற்றி பற்றி சிந்திக்க வேண்டுமாயின் இந்த வெற்றி மிகமுக்கியமானதாக இருந்தது எனத் தெரிவித்த அவர், தனது அணி வீரர்களின் செயல்பற்றி மிகுந்த மகிழ்ச்சியடைவதாகவும் தெரிவித்துள்ளார்.

கங்குலி இந்தத் தோல்வி பற்றி குறிப்பிடும்போது இரண்டாவதாகத் துடுப்பெடுத்தாட வேண்டியேற்பட்டமை துரதிஷ்டம் என்றும் ஆரம்பத்திலேயே தனது வீரர்கள் ஆட்டமிழந்தமை ஆட்டத்தின் உறுதி நிலையை மாற்றியதாகவும், 319 ஓட்டங்கள் அவர்கள் குவித்தபோது 60 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுக்களையிழந்தமை நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாகும் என்றார். எனினும் இன்னும் தனது அணி முன்னணியிலேயே இருப்பதாக அவர் கூறியுள்ளார்.

## பந்து வீசத் தாமதம் கங்குலிக்கு அபராதம்



நேற்று முன்தினம் ஜம்ஷெட்பூரில் நடைபெற்ற மூன்றாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டியின்போது இந்திய வீரர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கும் மேலாகப் பந்து வீசி தாமதம் ஏற்படுத்தியதன் விளைவாக அணித் தலைவர் கங்குலியின் அன்றைய ஊதியத்தை அபராதமாகச் செலுத்த வேண்டும் என போட்டி நடுவர் கிறிஸ் ப்ரோட் உத்தரவிட்டுள்ளார்.

எனினும், இது தொடர்பாக சர்வதேச கிரிக்கெட் சபையிலிருந்து உத்தியோகபூர்வ அறிவித்தல் எதுவும் கிடைக்கவில்லை.

50 ஓவர்பந்து வீசி முடிக்க வேண்டிய நேரத்தைவிட 30 நிமிடங்கள் அதிகரித்ததாக இங்கு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த நவம்பரிலும் பாகிஸ்தானுடனான போட்டியின்போது இதே தவறைச் செய்ததால் இரு டெஸ்ட் போட்டிகளில் விளையாட அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. எனினும் கங்குலியின் மேன்முறையீட்டினால் அவர் அதிலிருந்து தப்பினார்.

விளையாட்டு

## அவுஸ். சம்பியன்



மகளிர் உலகக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டியில் இந்திய அணியை 98 ஓட்டங்களால் தோற்கடித்து அவுஸ்திரேலியா அணி. இதில் அவுஸ். அணியில் சதமடித்த ரொல்ரோன் மகிழ்ச்சியில.

## சிந்தனைக்கு



சான்றோரைப் போற்றுவதும் கற்றோரைக் கௌரவிப்பதும் தமிழர்களாகிய எமது மரபு; எமது சீரிய பண்பாடு.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-04-2005



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com


## உள்ளதைச் சொன்னால்....!

ஊடக சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்தி வரும் ஊடகவியலாளருக்கு எதிராக விரைவில் சட்டம் கொண்டு வரப்படும் என்ற அமைச்சர் அனுரா பண்டார நாயக்கவின் எச்சரிக்கை ஊடகவியலாளர்களின் சுதந்திரமான செயற்பாடுகளைக் கட்டுப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

சனாதிபதி சந்திரிகாவைப் பொறுத்து அவர் நீண்டகாலம் அவசரகாலச்சட்டத்தின் கீழ் ஆட்சி நடத்தியவர். அவசர காலச்சட்டம் அமுலில் இருக்கும் வேளையில் ஊடகங்கள் மீதோ ஊடகவியலாளர்கள் மீதோ அழுத்தத்தைப் பிரயோகிக்க அவருக்கு விசேடித்த சட்டம் ஒன்று தேவையில்லை. ஆனால் அவசர காலச்சட்டம் அமுலில் இல்லாத போது ஊடகவியலாளர்கள் மீதான ஒடுக்கு முறைக்கு சட்டமொன்று தேவையாகவுள்ளது.

அண்மைக்காலத்தில் ஊடகவியலாளர்கள் மீதும், சுயாதீனமான ஊடகங்கள் மீதும் அரசாங்கம் கடும் சீற்றம் கொண்டுள்ளது. இதனைச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே அண்மையில் வெளிப்படையாகத் தெரிவித்திருந்தார். ஊடகங்கள் சிறிதைப் பெரிதாக்கி அரசிற்கு எதிராகப் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியிருந்தார்.

அரசாங்கத்தை ஊடகங்களோ, ஊடகவியலாளர்களோ விமர்சிப்பதையும் உண்மைகள் மற்றும் பலவீனங்களை வெளிக்கொண்டு வருவதையும் சனாதிபதியால் ஜீரணித்துக் கொள்ளமுடியவில்லை. சிறி லங்கா ஆட்சியாளர்களில் ஊடகங்கள் மீது அதிகளவு வழக்குப் பதிவு செய்தவர் சனாதிபதி சந்திரிகா என்பதில் இருந்தே ஊடகங்கள் மீது அவர் கொண்டுள்ள வெறுப்பு உணர்ந்து கொள்ளத் தக்கது.

இத்தகைய நடவடிக்கைகளும் போதாது என்ற நிலையிலேயே தற்பொழுது விசேட சட்டம் குறித்து அரசாங்கம் சிந்திக்கத் தொடங்கியுள்ளது. இது நிறைவேற்றப்படும் நிலை ஒன்று உருவாகுமானால் ஊடகத்துறை மீதும் கட்டுப்பாடுகள், ஒடுக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படும் வாய்ப்புண்டு.

இத்தனைக்கும் 1994 பொதுத்தேர்தலில் பொ.ஐ.முன்னணியின் வெற்றிக்கும் அதே ஆண்டு சனாதிபதி தேர்தலின் சந்திரிகாவின் வெற்றிக்கும் ஊடகங்கள் ஆற்றிய பணி மகத்தானது. ஊடகங்கள் அன்றைய ஆட்சிக்கு எதிராக மேற்கொண்டிருந்த தீவிர பிரச்சாரமும் சந்திரிகா குமாரதுங்கா ஊடகங்களைப் பயன்படுத்திக்கொள்ளக் கிடைத்த வாய்ப்புமே அன்று சந்திரிகா ஆட்சியைப் பிடிக்க காரணமாக அமைந்தது எனின் மிகையானது. ஆனால் தற்பொழுது ஊடகங்கள் ஆட்சியாளருக்கு எதிராகக் கூறும் குற்றச்சாட்டுக்கள் செய்யும் விமர்சனங்கள் என்பனவற்றை அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

இத்தகையதொரு நிலையில்தான் ஊடகவியலாளர்களைச் சட்டத்தின் மூலம் மிரட்டிப் பணிய வைத்து விட அரசாங்கம் முற்படுகின்றது. இதனை வேறு விதமாகக் கூறுவதானால் சட்டம் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்பட்டதானதென்ற ரீதியில் பொலிசாரினதும், ஆயுதப்படையினரதும் மேற்பார்வைக்குள் ஊடகவியலாளர்களின் நடவடிக்கைகளைக்கொண்டு வருவதன் மூலம் ஊடகவியலாளர்களை மிரட்டிப் பணியவைக்க அரசு முற்படுவது போல் உள்ளது.

ஆகையினால் ஊடகவியலாளரின் சுதந்திரமான செயற்பாட்டினைக் கட்டுப்படுத்தும், அச்சுறுத்தும் வகையில், அமையும் சட்டமூலமானது ஆட்சியாளர்கள் தமது தவறைத் திருத்திக் கொள்ளாது மக்களின் கருத்துச் சுதந்திரத்தை அச்சுறுத்தும் வகையில் செயற்பட முற்படுவதாகவே இருக்கும். ஆனால் இத்தனைக்கும் சுதந்திரமான ஊடகவியலாளர்களோ அன்றி ஊடகங்களோ ஆட்சியாளர்கள் மீது மேற்கொள்ளும் அவதுறுகளை விட அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ஊடகங்கள் எதிர்த்தரப்பின் மீது மேற்கொள்ளும் அவதூறுப்பிரச்சாரங்கள் பொய்ப்பிரச்சாரங்கள் என்பன மிக அதிகமாகும்.

அரசாங்கம் தமது கட்டுப்பாட்டிலிருக்கும் ஊடகங்களை பல வழிகளில் தவறாகப் பயன்படுத்துகின்றது. முதலில் அரச ஊடகத்தை தமது கட்சியின் ஊடகம் போன்றே ஆட்சியாளர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர். அதாவது ஆட்சியின் முழு அளவிலான பிரச்சாரச் சதானமாக அதுவே உள்ளது.

இரண்டாவதாக எதிர்க்கட்சிகள் மீதான பொய்யான குற்றச்சாட்டுக்கள் ஒரு புறமும் ஆட்சியாளர்களின் சாதனை என உண்மைக்கு மாறான பிரச்சாராம் மறுபுறமும் என பெரும் எடுப்பில் பொய்ப்பிரச்சாரத்தில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது. எது உண்மை? எது பொய்? எது எனப் பகுத்தறிய முடியாதளவில் அதன் பிரச்சாரம் உள்ளது. அதிலும் குறிப்பாக யுத்தகாலப் பிரச்சாரத்தில் பொய் கூறுவதில் சிறிலங்கா அரச ஊடகங்கள் சாதனைஅளவை எட்டின எனின் மிகையாகாது.

இந்த நிலையில் அரச ஊடகங்களைத் தவறான வழியில் பயன்படுத்தும் ஆட்சியாளர்கள் ஊடகவியலாளர்களைக் கட்டுப் படுத்த சட்டம் கொண்டுவர முயற்சிப்பது என்பது பொய்ப்பிரச் சாரத்தின் ஏகபோகத்தை அனுபவிக்க அவர்கள் முற்பட்டு நிற்பதையே வெளிக்காட்டுவதாய் உள்ளது. அவ்வாறு இல்லாது விடில் ஊடகவியலாளரைத் திருத்தும் முன் தம்மைத் திருத்திக்கொள்ள ஆட்சியாளர்கள் முற்பட வேண்டும்.

# விமல் வீரவன்ச 100 லட்சம் ரூபா நஷ்டஈடு செலுத்த வேண்டும்

## "ராவய" மேல் நீதிமன்றில் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச நூறு லட்ச ரூபா நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று ராவய பத்திரிகை நிறுவனம் மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்துள்ளது.

மகரகம பிரதேசத்தில் கடந்த ஆறாம் திகதி நடந்த பொதுக் கூட்டம் ஒன்றில் அரச சார்பற்ற வெளிநாட்டு பர்கொஸ் நிறுவனம் சுனாமி நிவாரணத்தின் ஒரு பகுதியை ராவய நிறுவனத்திற்கு வழங்கியுள்ளதாக ஜே.வி.பி.யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச குற்றம் சாட்டியிருந்தார். இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ள ராவய பத்திரிகை நிறுவனம் இந்த நஷ்ட ஈட்டைக் கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளது. இது எமது பத்திரிகை நிறுவனத்திற்கு பெரும் அபகீர்த்தியை ஏற்படுத்தியுள்ளதுடன் விமல் வீரவன்ச இது தொடர்பான விபரங்களை முடிந்தால் பொது மக்களுக்கு அறிவிக்கட்டும் என்றும் ராவய நிறுவனம் தெரி வித்துள்ளது.

## குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களுக்கு நிவாரணப் பொருட்கள் வழங்கல்

அமெரிக்காவிலுள்ள சத்திய சாயிபாபா மத்திய நிலையத்தின் அனுசரணையுடன் பகவான் சிறி சத்யசாயி பாபா கொழும்பு மத்திய நிலையம், திருகோணமலை மாவட்டத்தில் ஆதரவற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் இல்லங்களுக்கு ஒரு தொகை நிவாரணப் பொருட்களை வழங்கியுள்ளது. இப்பொருட்கள் அன்பு இல்லம், சிவானந்த தபோவனம், கருணா வாசா உள்ளிட்ட இல்லங்களுக்கு வழங்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. பகவான் சிறி சத்திய சாயிபாபா கொழும்பு மத்திய நிலைய இணைச்செயலாளர் எஸ்.என்.இராஜஜோதி இப்பொருட்களை அன்பு இல்லத்தில் ஒப்படைத்தார். அவற்றை தமிழர் புனர்வாழ்வுக்கழக திருமலை மாவட்டப்பிரமுகர் சி.குமரகுருபரன், பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர். (25)

# இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பெயரும் சின்னமும் மாற்றப்படவுள்ளன

(கொழும்பு)

இலங்கை தொழிலாளர் காங்கிரசின் பெயரையும், கட்சியின் சின்னத்தையும் மாற்றுவதாக அக் கட்சியின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தேர்தல் ஆணையாளர் திணைக்களத்திற்கு அறிவித்துள்ளார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பது ஒரு தொழிற் சங்கத்தை குறிப்பிடும் பெயர் எனவும் ஆகவே கட்சியின் பெயரையும் சின்னத்தையும் மாற்றப்போவதாக ஆறுமுகம் தொண்டமான் அறிவித்துள்ளார்.

மேலும் பத்து அரசியல் கட்சிகள் தமது கட்சிகளை பதிவு செய்வதற்கு தேர்தல் ஆணையாளரிடம் விண்ணப்பம் செய்துள்ளன. இக் கட்சிகளை பதிவு செய்வதற்கு இது வரை நடடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது. வடகிழக்கு மாகாண சபைத் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதால் இக்கட்சிகளைப் பதிவு செய்வது சம்பந்தமாக சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வீதியோர மரங்கள் வெட்டப்பட்டமையால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு

(வவுனியா செய்தியாளர்)

இலங்கை மின்சார சபையின் வவுனியா கிளையினரால் மகாறம்பைக்குளம் வீதியோரமாகவுள்ள மரங்கள் வெட்டப்பட்டுள்ளமையால் போக்குவரத்திற்கு பெரும் இடையூறு ஏற்பட்டுள்ளது.

இலங்கை மின்சார சபையின் வவுனியாக் கிளையினர் மகாறம்பைக்குளம் வீதிக்குச் சமாந்தரமாகச் செல்லும் மின்சாரக் கம்பிகளுக்கு கீழாகவுள்ள பெரும் மரங்களை நேற்றுத் தறித்து வீதியிலும், வீதியோரமாகவும் குவித்துள்ளனர். இதனால் வவுனியாவில் இருந்து மகாறம்பைக்குளம் செல்லும் வாகனங்களும், பாதசாரிகளும் பெரும் சிரமங்களை எதிர் கொண்டுள்ளனர்.

இலங்கை மின்சார சபையினரால் வெட்டப்பட்ட இம் மரங்கள் அகற்றப்படாமையால் வீதி விபத்துக்களும் ஏற்படும் அபாயம் தோன்றியுள்ளது. (10)

# நிதியமைச்சர் சரத் அமுனுகம நேற்று அமெரிக்கா பயணம்

(கொழும்பு)

அமெரிக்காவின் வோஷிங்டனின் நடைபெறவுள்ள சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியின் விசேடகூட்டம் ஒன்றில் கலந்து கொளவதற்காக சிறிலங்காவின் நிதியமைச்சர் சரத் அமுனுகம நேற்று அமெரிக்கா சென்றுள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத் துறையின் பல்வேறு முக்கிய விடயங்கள் தொடர்பாக இங்கு கலந்துரையாடப்படுமென வோஷிங்டன் புறப்படும் முன்னர் அமைச்சர் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து கருத் துத் தெரிவிக்கையில், நாட்டின் பொருளாதாரம், சுனாமி நிதியுதவிகள், இலங்கைக்கான கடன் வசதிகள் போன்ற பல்வேறு விடயங்கள் பற்றிக் கலந்துரையாடப்படுமென மேலும் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதிசந்திரிகாவின் கைகளிலேயே நாட்டின் அரசியல் எதிர்காலம் உள்ளதாம்

## ——பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்

(கொழும்பு)

நாட்டின் அரசியல் எதிர்காலம் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவினதும், சுதந்திரக்கட்சியினதும் கைகளிலேயே இருக்கிறதென பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அலரிமாளிகையில் வைத்து கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நாட்டில் அரசில் ஸ்திரமின்மை நிலவுகின்றது. இதுபற்றி அச்சம் கொள்ளவேண்டியதில்லை. ஒரு கருத்துக்கணிப்பிற்கோ, சனாதிபதித் தேர்தலுக்கோ, அரசியலமைப்பு மாற்றத்திற்கான தீர்மானங்கள் சனாதிபதியினதும் அவரது கட்சியினதும் கைகளிலேயே தங்கியுள்ளது. நாங்கள் அரசியல் யாப்பை மாற்றவுள்ளளோம். இது தொடர்பாக 1994 இல் நாம் மக்களுக்கு உறுதியளித்திருந்தோம். ஆனால் அப்போது மாற்றத் தவறிவிட்டோம். எனவே நாம் இவ்வுறுதி நிலையிலாவது மாற்ற வேண்டும். நாட்டினது தலையெழுத்தும், அரசியல்வாதிகளினது தலையெழுத்தும், மக்களினது தலையெழுத்தும் தனிப்பட்ட அரசியல்வாதியின் சாதனையால் தீர்மானிக்கப்பட முடியாது. மக்கள் அரசியல்வாதிகளைத் தெரிவுசெய்வதற்குரிய உரிமைகளைக் கொண்டுள்ளனர் எனவும் அவர் தெரிவித்தார்.

# சமஷ்டி முறை, தனியார் மயமாக்கல் நாட்டை முன்னேற்ற அவசியமானது

## — எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

சமஷ்டி முறை இல்லாமலும் தனியார் மயப்படுத்தல் இல்லாமலும் நாட்டை முன்னேற்ற முடியாது. மக்கள் விடுதலை முன்னணி வேண்டுமென்றால் இருக்கலாம். இல்லையென்றால் போகலாமென சனாதிபதி கூறுகிறார். ஆனால், சனாதிபதி இருக்கும்வரை நாட்டை முன்னெடுத்துச் செல்ல முடியாது வழங்கிய உறுதிமொழிகளை நிறைவேற்றுகிறார்களில்லை என ஜே.வி.பி.யினர் கூறுகின்றனர் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

சிறிகோத்தாவில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சிக் கூட்டத்தில் தலைமை தாங்கி உரையாற்றும்போதே ரணில் இவ்வாறு கூறினார். கூட்டமைப்பு அரசாங்கம் தனது அதிகாரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற்காகச் சொல்கின்றது. மக்களின் தேவைகள் குறித்து அது கவனம் செலுத்தவில்லை.

மக்களுக்குப் பொய்யைக் கூறி இந்த நாட்டை நிர்வகிக்கும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் இன்று மக்களைப் பாதுகாக்க முடியாத நிலையில் உள்ளது. மக்களை மறந்து தங்களின் அதிகாரத்தை மட்டுமே பாதுகாத்துக் கொண்டு செல்கின்றனர் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

# பிரான்ஸ் செல்பவர்களுக்கு விரல் ரேகை பதிவு நடைமுறை

சிறிங்காவிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்குப் பயணம் மேற்கொள்பவர்கள் தங்கள் விரல் ரேகையைப்பதிவு செய்யும் நடைமுறை தற்போது அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

சிறிலங்காவிலிருந்து பிரான்ஸ் நாட்டிற்குச் செல்லும் அமைச்சரவை அந்தஸ்து பெற்ற அமைச்சர்களும் விரல் ரேகையைப் பதிவு செய்து விட்டே செல்ல வேண்டியுள்ளது. இந்நடைமுறைக்கமைய முதன் முத லில் பிரான்ஸ் செல்வதற்கான விஸாவைப் பெறுவதற்காக தனது கைவிரல் ரேகைகளை நிதியமைச்சர் சரத் அமுனுகம பிரான்ஸ் தூதரகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பதிவுசெய்தார். அமெரிக்கா மற்றும் பிரிட்டன் தூதரகங்களில் இருக்கும் நடைமுறையை விட இங்கு கடைப்பிடிக்கப்படும் நடைமுறை வித்தியாசமானது எனத் தெரிவிக்கப்படுகிறது. மாலிக்கு அடுத்தப் படியாக சிறிலங்காவிலேயே பிரான்ஸ தூதரகம் இந்த நடைமுறையை பரீட்சார்த்தமாகச் செயற்படுத்தி வருகிறது. வருடாந்தம் மூவாயிரம் பேர் சிறிலங்காவிலிருந்து பிரான்சிற்கு பயணம் மேற்கொள்கின்றனர்.

## 25 லட்சம் மோசடி!

வன விலங்கு திணைக்களத்தில் கணக்குப் புத்தகத்திலிருந்து சுமார் 25 இலட்சம் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் நாயக திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த வருடம் திணைகளத்திற்கு இரண்டு கோடியே 50 இலட்சம் ரூபா கிடைத்திருந்தது. இதில் சுமார் இரண்டு கோடியே 25 இலட்சம் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மீதி 25 இலட்சம ரூபாவுக்கான பதிவுகள் எதுவும் இல்லையென கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது. (32)

# மையோகார்டிரிஸ் நோய் கண்டியில் மூவர் பலி!

பதுளை மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய மையோகார்டிரிஸ் நோய் இப்போது கண்டி மாவட்டத்திலும் தோன்ற ஆரம்பித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கண்டி மாவட்டத்தில் இது வரை இந்நோய்க்கு இலக்காகி மூவர் உயிரிழந்திருப்பதாகத் தெரியவந்துள்ளது. இதயத்தைத் தாக்கும் வைரஸ் காய்ச்சலான மையோகார்டிரிஸ் இந்நோயினால் இது வரை இருவர் பலியாகியிருப்பதைக் கண்டி பேராதனை போதனா வைத் தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் சந்திரா குணதிலக்க உறுதி செய் துள்ளார். மூன்றாமவரின் மரணம் மையோகார்டிரிஸினால் நிகழ்ந்ததா என்பது குறித்து ஆய்வு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். நாளாந்தம் காய்ச்சலுக்கு சிகிச்சை பெறுவதற்காக 10 தொடக்கம் 15 நோயாளர்கள் வருகின்றனர். எனினும் இவர்களிடம் மையோகார்டிரிஸ் நோய்க்கான அறிகுறிகள் தென்படவில்லை. இவர்களுக்கு ஏற்பட்டிருப்பது டெங்குக் காய்ச்சலா அல்லது வைரஸ காய்ச்சலா எனப் பரிசோதிக்கப்படுகின்றது எனவும் வைத்தியர் சந்திரா குணதிலக்க தெரிவித்தார். பேராதனை போதனா வைத் தியசாலையில் கடமையாற்றும் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரும் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அத்துடன் மையோகார்டிரிஸ் நோயால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கு சிகிச்சையளித்த ஒரு வைத்தியரும் இரு சிற்றூழியர்களும் இந்நோயால் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. மரணமடைந்தவர்களில் ஒருவர் மருத்துவ பீட இறுதியாண்டு மாணவனென்றும் நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிக்க முற்பட்டே இவர் நோய்க்கு இலக்கானார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. வைத்தியசாலை நிர்வாகம் இது குறித்து போதிய கவனம் செலுத்துவதில்லையென வைத்திய சாலை ஊழியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# அம்பாறையில் துப்பாக்கிச் சூடு; பொலிஸ் உட்பட மூவர் காயம்

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் தெகியத்தைக் கண்டியிலுள்ள பிகிட்டிவெல என்னும் கிராமத்தில் நேற்று முன்தினம் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச்சூட்டில் பொலிஸ் கான்டஸ்டபிள் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்துள்ளனர்.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் டிக்சன் ரத்னா யக்கா (வயது -35 ) என்பவர் விடுமுறையில் அக்கிராமத்திற்குச் சென்ற சமயம் இத்துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறிப்பிட்ட சம்பவத்தில் காயமடைந்தவரும் மேலும் இரண்டு கிராம வாசிகளும் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# மரணமான சிப்பாய் வீட்டில் கப்பம் பெறும் முயற்சி

(கொழும்பு)

சிறிலங்கா இராணுவ தலைமையகத்தின் கணக்காய்வு பிரிவு அதிகாரி எனத்தம்மை அடையாளப்படுத்திக் கொண்ட ஒருவர் யுத்தத்தில் மரணமான படையினர் ஒருவரின் வீட்டாரிடம் இருந்து பெருமளவு கப்பம் பெற முயன்ற சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஆனமடுவ பகுதியில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் குறித்த சந்தேக நபர் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். மரணமான இராணுவச் சிப்பாய்யின் இழப்பீட்டு பணத்தை பெறவேண்டுமானால் தமக்கு கப்பம் தரப்படவேண்டும் என அக் குடும்பத்தாரிடம் அவர் கோரிக்கை விடுத்ததாக தெரிவிக்கப்படுகின்றது. பொலிசார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (32)

### தாயகம்....

உயரிய உணர்வோடு எப்போதும் இயங்கி வந்தவர் நாட்டுப்பற்றாளர் இளையதம்பி நடராஜா (தில்லைக்கூத்தன்)அவர்கள். எத்தகைய இடையூறுகள், அச்சுறுத்தல்கள் எல்லாம் வந்தபோதும் தனது நிலைப்பாட்டில் எந்தத் தளர்வும் இன்றி உறுதியாக நின்று தமிழ்த் தேசியத்தின் பக்கம் குரல்கொடுத்தவர் தில்லைக்கூத்தன் அவர்கள்.

தனது வாழ்களத்தைப் பொருட்படுத்தாமல் தமிழின விடுதலையை விரும்பி அதனை மதித்து, அதற்காக தனது எழுத்தையும் பேச்சையும் செயற்பாடுகளையும் ஒழுங்கமைத்து இயங்கிவந்தார் இவர்.

தமிழர் தாயகத்தை திட்டமிட்டு சிங்கள ஆட்சியாளர்கள் சிதைக்க முற்பட்டபோதெல்லாம் தில்லைக்கூத்தன் அவர்களின் எழுத்துக்கள் அதனை வன்மையாகக் கண்டித்தன. அதேவேளையில் தமிழினத்தை விழிப்பூட்டி எதிரிமீதான எச்சரிக்கையையும் கவனத்தையும் ஏற்படுத்தியது. இவருடைய பேனா. இதற்கு இவருடைய கட்டுரைகளும் நூல்களும் சாட்சியாக இருக்கின்றன.

சிறந்த கல்வியாளராக இருந்த தில்லைக்கூத்தன் அவர்கள் தமிழீழ தேசியத் தலைவர் மீதுபற்றும் மதிப்பும் கொண்டு அவருடைய தலைமையில் தனது விடுதலைப் பணியை மகிழ்வோடும் பெருமையோடும் தொடர்ந்தது குறிப்பிடத்தக்கது.

தமிழ்மக்களின் பிரச்சினையையும் தமிழீழ போராட்டத்தையும் உலக அரங்கில் எடுத்துச் செல்லுவதிலும் தில்லைக்கூத்தன் அவர்கள் தீவிரமாக உழைத்தார்.

தனது முதுமைக்காலத்திலும் கூட அவர் எந்தச்சோர்வுமின்றி தனது தமிழ்த்தேசிய நிலைப்பாட்டில் நின்று ஒருதந்தைக்குரிய அரவணைப்போடும் உரிமையோடும் தனது பங்கையும் பலத்தையும் வழங்கினார்.

எல்லோரையும் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இணைத்து போராட்டத்தைப பலப்படுத்துவதில் அக்கறை கொண்டிருந்த தில்லைக்கூத்தன் அவர்களை தமிழிழ விடுதலைப்புலிகளாகிய நாம் நாட்டுப் பற்றாளராக கௌரவித்துள்ளோம்.

இத்தகைய பெருமைகளுக்கும் மதிப்புக்குரிய பற்றாளர் தில்லைக்கூத்தன் அவர்களுக்கு எமது இறுதி வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நாட்டுப்பற்றாளர் தில்லைக்கூத்தன் அவர்களின் குடும்பத்தாருடைய துயரில் தமிழீழ மக்களுடன் நாமும் பங்குகொள்கிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகள்..

ளது.

இந்த உளவுத்துறை எச்சரிக்கை குறித்து சிறிலங்கா கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரியிடம் ஊடகவியலாளர்கள் விளக்கம் கேட்டபோது, இது வழமையான அவதானிப்பு மற்றும் முன் எச்சரிக்கை நடவடிக்கைகள் என்று கூறியுள்ளார்.

இதையே சிறிலங்கா இராணுவ தரப்பின் ஒரு பிரிவினா வேறு ஒரு தகவலை சுட்டிக்காட்டுகின்றனர். 1995 ஆம் ஆண்டு யுத்த நிறுத்த ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போது தமிழீழ விடுதலைப்புலிகள் திருகோணமலை துறைமுகத்தைத் தாக்கி மூன்றாம் ஈழப்போரை பிரகடனம் செய்தனர்.

இந்த ஏப்ரல் மாதமும் அப்படியான தாக்குதல் நடந்துவிடக் "கூடுமோ" என்று சிறிலங்கா இராணுவம் அச்சத்துடன் இருபபதாக இராணுவத்தரப்பின் ஒரு பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

### சாள்ஸ்...

தனர். இதனையடுத்து போராளிகளின் விளையாட்டு அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டி நடைபெற்றது.

தொடர்ந்து போராளிகளின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இதில் கவிதா நிகழ்வு, மாவீரர் நடனம் மற்றும் போராளிகளின் இசை நிகழ்வுகள் எனப் பல நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் கட்டளைத் தளபதிகள், சிறப்புத் தளபதிகள், தளபதிகள், போராளிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ச,தீ)

### பூநகரில்....

அவரை திருகோணமலைக்கு கொண்டு செல்வதற்கு அனுமதி வழங்க மறுத்தனர். இதன்பின்னர் கடும் இழுபறியின்பின் வழித்துணையின்றி கொண்டு செல்வதற்கு அனுமதிக்கப்பட்டு அவர் கட்டைபறிச்சான் சோதனை நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு இராணுவத்தினர் அவர் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்க மறுத்துக் கொண்டிருந்தனர். போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவினரிடம் இராணுவத்தினரின் இச்செயற்பாட்டை அறிவித்ததையடுத்து அவர்கள் மீளவும் இது தொடர்பாக இராணுவ அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டனர். மீளவும் அவர்கள் கண்காணிப்புக்குழு வழித்துணை இல்லாமல் செல்ல முடியாது என்று அறிவித்தனர். இதன்பின்னர் கொழும்பில் உள்ள கண்காணிப்புக்குழு தலைமையகத்துக்கு அறிவிக்கப்பட்டு அவரை தொடர்ந்து செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இதன் பின் கட்டைபறிச்சான் இராணுவத்தினர் காயமடைந்தவர் செல்லலாம் ஆனால் அவருக்கு துணையாக போராளிகள் எவரும் செல்லமுடியாது என நிபந்தனை விதித்தனர். காயமடைந்தவர் உடல்நிலை மோசமாகிய நிலையில் அவருக்கு துணையாகச் செல்லக்கூடாது என்ற நிபந்தனை ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லாத நிலையில் அதற்கான அனுமதி கோரப்பட்டது. இரவு 10 மணிவரை படையினரால் அனுமதி வழங்கப்படாத நிலையில் மழை பெய்து கொண்டிருந்த சூழலில் உடல்நிலை கடுமையான தேசியத்துணைப்படைவீரர் மீளவும் சம்பூருக்கு கொண்டு செல்லப்பட்டார். தாக்குதலில் காயமடைந்து உடல் நிலை மோசமான ஒருவரை சிகிச்சைக்காக பயணம் செய்ய படையினர் தடைவிதித்தமையானது ஒரு மோசமான செயற்பாடு என்று திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் போர் நிறுத்த கண்காணிப்புக குழுவிடம் தெரிவித்துள்ளார்.(25)

### கைதான...

பட்டது தெரிந்ததே. இந்த நிலையில் நேற்றுப் பிற்பகல் சிப்பாய் விடுவிக்கப்பட்டமை குறித்து கருத்து வெளியிட்ட இராணுவப் பேச்சாளர் தயாரட்ணாயக்கா;

இராணுவச்சிப்பாய் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டு தறபோது திருமலையில் அமைந்திருக்கும் முகாமுக்கு அழைத்து வரப்பட்டுள்ளார். உரிய வைத்திய பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டபின் படைமுகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இவர் என்ன காரணங்களுக்காக புலிக்ளின் கட்டுப்பாட்டுப் பிரதே சத்திற்குள் சென்றார் என்ற விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (25)

### நோர்வே...

துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனை 19 ஆம் திகதி கிளிநொச்சியில் சந்திக்கும் சூல் ஹெய்ம் 20 ஆம் திகதி கொழும்பில் சிறிலங்கா அரசுத்தலைவர்களை சந்தித்துப் பேச்சு நடத்துவார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (32)


IIS CITY CAMPUS

MBA

( Master of Business Administration )

Manipal பல்கலைக்கழகத்தின் மேற்படி கற்கை நெறி எமது நிறுவனத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. யாழ். குடாநாட்டில் பயில விரும்புவோர் அல்லது கற்கைநெறி தொடர்பாக ஆர்வம் உடையோருக்கான கருத்தரங்கு ஒன்று நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கருத்தரங்கில் பல்கலைக்கழகத்தின் இலங்கைக்கான பிரதிநிதிகளும் கலந்து கொள்ள உள்ளார்கள்.

இடம்: IIS பிரதான் மண்டபம்
#100, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

காலம்: 16.04.2005
மாலை 03.00 மணி

ஆர்வமுடையோர் பங்கு பற்றிப் பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

மேலதிக விபரங்களுக்கு :
Mrs. Chelvy Suntheresen,
Centre Manager
T.P : 021 222 8060

(சி-11495)

Director
IIS City Campus,
# 181, Navalar Road, Jaffna.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு ஏப்ரல மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது